Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 240

ஞாயிற்றுக்கிழமை
24 ஜூலை 2022

ஆடி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+08

விலை: 60/=

முச்சந்தி முரளி



"அப்ப முந்தின மாதிரி தீபாவளிக்கு இந்தமுறையும் தீர்வு வருமெண்டுறாரோ?

# எனது பதவிக்காலத்துக்குள் அரசியல் தீர்வு நிச்சயம்!

## இப்படிச் சொல்கிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜூலை 24

பொருளாதாரப் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காண்பேன். அதைத் தொடர்ந்து எனது பதவிக் காலத்துக்குள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை நிச்சயம் பெற்றுக் கொடுப்பேன் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 15 ➤



### போதுமானளவு டீசல், பெற்றோல்

கொழும்பு, ஜூலை 24
நாட்டில் அடுத்த 30 நாள்களுக்குத் தேவையான டீசல் கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. அத்துடன், 22 நாள்களுக்கு போதுமான பெற்றோலும் இருப்பில் உள்ளதாக கூட்டுத்தாபனம் குறிப்பிட்டது. (அ-ஒ-இ)

காலிமுகத்திடல் வன்முறை

### ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை காட்டி மிரட்டுகிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஜூலை 24
ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்ட உடன்படிக்கைகளை முழுமையாக பேணிக் கொள்ளுமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசிடம் கோரியுள்ளது.

காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுவினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்து ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் ஜன 14 ➤

### வன்முறையாளர்களைத்தான் அதேபாணியில் அடக்கினோம்

மக்கள் போராட்டம் முடிந்து கிளர்ச்சிக்கே ஆயத்தமாகினர் என்கிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜூலை 24
காலிமுகத்திடலில் மக்கள் போராட்டம் ஜூலை 14 ஆம் திகதி பெரு வெற்றியுடன் முடிவுக்கு வந்துவிட்டது. அதன் பின்னர் அங்கு கிளர்ச்சிக்கான ஆயத்தங்களே முன்னெடுக்கப்பட்டு வந்தன. அவர்கள் வன்முறையை விரும்பினார்கள். அதன் வழியில் அவர்களுக்கு பதில் சொல்லி அடக்கியுள்ளோம் - இவ்வாறு ஜனாதிபதி 14 ➤

யாழ். நோக்கி வந்த ரயிலில் கொடூரம்;

### சிப்பாய் உதைத்து தள்ளியதால் பாதுகாப்பு அதிகாரி வீழ்ந்து சாவு!

யாழ்ப்பாணம், ஜூலை 24
கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வந்துகொண்டிருந்த ரயிலில் மதுபோதையில் பயணித்த சிப்பாய் உதைத்ததில் ரயில்வே பாதுகாப்பு அதிகாரியொருவர், ஓடும் ரயிலில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளார் என்று வெயங்கொட பொலிஸார் தெரிவித்தனர். 14 ➤

### அரசாங்கத்தின் மீது கூட்டமைப்பு நம்பிக்கை வைக்கவேண்டுமாம்

கூறுகிறார் பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஜூலை 24
தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நானும் அதீதகவனத்துடன் செயற்படுவோம். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட வேண்டும். இவ்வாறு புதிய பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். 12 ➤

கறுப்பு ஜூலை நினைவு நாளில்

### இன அழிப்புக்கு எதிரான தமிழ்க் கூட்டமைப்பு உதயம்

யாழ்., ஜூலை 24
கறுப்பு ஜூலை கலவரத்தின் 39ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்றைய தினம், இன அழிப்புக்கான சர்வதேச நீதியைக் கோரும் ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
இதன் ஆரம்ப நிகழ்வு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இன அழிப்புக்கு எதிரான தமிழ்க் கூட்டமைப்பு என்று அதற்குப் பெயரிட்டு 12 ➤

தமிழக அரசின்

### நிவாரணத்தோடு மூன்றாவது கப்பல்!

கொழும்பு, ஜூலை 24
தமிழக அரசால் வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் அடங்கிய மற்றுமொரு கப்பல் நாட்டை வந்தடைந்தது. கப்பலில் 74 கோடி ரூபா பெறுமதியான 12 ➤

தனியார் பேருந்துகளுக்கு

### டீசலை வழங்க இ.போ.ச. மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணத்தில் தனியார் பேருந்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலையில் நேற்று எரிபொருள் வழங்கப்படாமையால் குழப்ப நிலை ஏற்பட்டது. இது தொடர்பில் மாவட்டச் செயலருடன் இன்று சந்திப்பு நடத்தியும் சாதகமான முடிவு எட்டப்படவில்லை 15 ➤

### இ.போ.ச. யாழ். சாலையினர் இன்று பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ். சாலை ஊழியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர். இந்த நடவடிக்கையால் ஏனைய சாலைகளின் செயற்பாடுகளிலும் பாதிப்பு ஏற்படும் எனவும் 12 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரணிலுக்கு வாக்களிக்க ரூ.15 கோடி வரை பேரம்

## ராஜித குற்றஞ்சாட்டு

**கொழும்பு, ஜூலை 24**

**நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் வாக்கெடுப்பில் வெற்றிபெற ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல கோடி ரூபாவை வழங்கினார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

இணைய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெரமுனவின் முட்டாள்களை நன்கு பயன்படுத்திக்கொள்வார். ஜனாதிபதியைத் தெரிவுசெய்வது தொடர்பான விடயத்தில் நாங்கள் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தினோம். ஆனால், ரணில் விக்கிரமசிங்க தரப்பினர் தனித்தனியாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணத்தை வழங்குவது, எரிந்துபோன வீடுகளுக்கு பதிலாக வீடு, அவற்றுக்கு இழப்பீடு வழங்குவது, கார்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம், இரண்டு ஆண்டு காப்பீடு போன்றவற்றை வழங்குவதாக அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். இதன்போது பெருந்தொகையான பணம் பரிமாறப்பட்டது.

பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த எங்களுடன் பேச்சு நடத்திய 15 பேரை கொண்ட நாடாளுமன்ற குழுவினரும் எங்களிடம் பணத்தைக் கோரினர். டலஸ் அழகப்பெருமவை நாங்கள் ஆதரிக்கின்றோம், எங்களுக்கு எவ்வளவு பணம் தருவீர்கள் என கேட்டனர். இது பற்றி நான் சஜித்திடம் பேசினேன். ஐந்து சதம் கூட வழங்கக்கூடாது என அவர் சொன்னார். அதை நான் நூற்றுக்கு நூறு வீதம் ஏற்றுக்கொள்கிறேன். ரணில் விக்கிரமசிங்கவுக்கு இவர்கள் வாக்களிக்க 10 முதல் 15 கோடி ரூபா வரை பெற்றனர் என்று எனக்குத் தகவல் கிடைத்தது.

சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து இன்னும் பலவற்றை கற்றுக்கொள்ள வேண்டும். சஜித் பிரேமதாஸ முதிர்ச்சியான அரசியல்வாதியாக மாறிவருகிறார். அவர் மிக நேர்மையானவர் என்பதுடன் அப்பாவி- என்றார். (ஏ-இ)

# அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

அரசாங்கம் மேற்கொள்ளும் பயனுள்ள செயற்றிட்டங்களுக்கு எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாங்கள் எப்போதும் ஆதரவை வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

காலிமுகத்திடலில் நிகழ்த்தப்பட்ட அரச பயங்கரவாதச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். கடந்த காலங்களில் 69 இலட்சம் மக்கள் ஆணை பெற்ற முன்னாள் ஜனாதிபதி கூட மக்கள் கருத்துக்குப் பணிந்து நாட்டை விட்டு ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது.

அதை இந்த நாட்டின் அனைத்து அரசியல்வாதிகளும் புரிந்துகொள்வது மிகவும் பொருத்தமானது. பின்னர் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் 22 மில்லியன் மக்களின் விருப்பத்தின் பிரகாரமின்றி கோத்தபய ராஜபக்சவுக்குச் சாதகமான தரப்பால் மேற்கொள்ளப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியாக நாங்கள் மக்கள் கருத்துக்குப் பணிந்து செயற்பட்டோம்.

225 பேரும் ஒன்றே என்ற சமூகக் கருத்து இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அரசாங்கம் மேற்கொள்ளும் நல்ல பணிகளில் எந்நிலையிலும் பின்வாங்காது எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாங்கள் எப்போதும் ஆதரவை வழங்குவோம்- என்றார். (ஏ-இ)

# பணவீக்கத்தின் அதிகரிப்பால் உணவுத் திருட்டு அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 24

பணவீக்கம் காரணமாக நாட்டில் உணவுத் திருட்டுச் சம்பவங்கள் இரு மடங்காக அதிகரித்துள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது. தோட்டங்களில் பழங்கள் மற்றும் மரக்கறிகள் திருடப்படுவது பெருமளவில் அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நாட்டின் பல்வேறு விற்பனை அங்காடிகளில் பொருள்கள் திருடப்பட்டமை தொடர்பான ஆயிரக்கணக்கான சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. அதேநேரம் கடைகளிலும் உணவுப்பொருள்களைத் திருடுவது அதிகரித்துள்ளது.

மூன்றுவேளை உணவு இன்றி ஒருவேளை, அல்லது இரு வேளை உணவு உண்ணும் குடும்பங்களின் எண்ணிக்கை இலங்கையில் 10 லட்சமாக அதிகரித்துள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வொன்றில் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ-இ)




# காலிமுகத்திடல் தாக்குதலுக்கு யாழில் கண்டனப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் கண்டனப் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

'காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான ரணில், ராஜபக்சக்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்போம்' எனும் கருப்பொருளில் யாழ். மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-14.20)

# செப்ரெம்பருக்குள் பணவீக்கம் 70 சதவீதமாக அதிகரிக்கும்

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 24

நாட்டின் பணவீக்கம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் 70 சதவீதமாக அதிகரிக்கும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கியின் நிதியுதவியால் இலங்கையின் பணவீக்கத்தைச் சீர்செய்ய முடியாது. அது தற்காலிக தீர்வு மட்டுமேயாகும். தற்போது இலங்கை எதிர்நோக்கியுள்ள நிதி, பொருளாதார மற்றும் ஏனைய பிரச்சினைகளை சீர்செய்ய புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முடியும் என நம்புகின்றேன்- என்றார். (ம-14.இ)

# ஜனாதிபதி செயலக ஆக்கிரமிப்பை உங்கள் நாட்டில் அனுமதிப்பீர்களா?

## தூதுவர்களிடம் ரணில் கேள்வி

கொழும்பு, ஜூலை 24

வெளிநாட்டுத் தூதுவர்கள் இலங்கை குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிருப்தி தெரிவித்துள்ளதுடன், உங்கள் நாடுகளில் ஜனாதிபதி அலுவலகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பதற்கு அனுமதிப்பீர்களா? என்றும் கேள்வி எழுப்பினார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான அரச படைகளின் தாக்குதல்கள் குறித்து வெளிநாட்டு தூதுவர்கள் பல்வேறு கருத்துக்களையும் கண்டனங்களையும் தெரிவித்த நிலையிலேயே, ஜனாதிபதி அலுவலகத்துக்கு தூதுவர்களை அழைத்த ஜனாதிபதி, தூதுவர்களின் கருத்துக்கள் தொடர்பான தனது அதிருப்தியை அவர்களிடம் வெளிப்படுத்தினார் என்று கொழும்பு வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

உங்கள் நாடுகளில் ஜனாதிபதி அலுவலகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பதற்கு அனுமதிப்பீர்களா? எதிர்காலத்தில் சமூக ஊடகங்களில் வெளியாவதை அடிப்படையாக வைத்து அறிக்கைகளை வெளியிடுவதற்குப் பதிலாக அதிகாரிகளைத் தொடர்புகொண்டு உரிய தகவல்களைப் பெறவேண்டும் என்றும் ரணில் அறிவுறுத்தியுள்ளார்.

இராணுவ நடவடிக்கைகள் குறித்து இராஜதந்திரிகளுக்குத் தெளிவுபடுத்தியுள்ள ஜனாதிபதி, நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்தும் அவர்கள் ஜனாதிபதி மாளிகையை சட்டவிரோதமாக ஆக்கிரமித்திருந்தனர். அங்கிருந்து வெளியேறுமாறு ஆர்ப்பாட்டக்காரர்களைக் கேட்டுக்கொண்டபோதிலும் அவர்கள் அதனை ஏற்கமறுத்து வேறு நேரத்தை முன்வைத்தனர். அதனை அதிகாரிகளால் ஏற்க முடியாது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான உதவிகள் இலங்கைக்கு நட்பு நாடுகளிடமிருந்து பெரிதும் தேவைப்படும் சூழ்நிலையில், சமூக ஊடகங்களை அடிப்படையாகவைத்து அறிக்கைகளை வெளியிடுவது இலங்கையின் பெயருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் தூதுவர்களிடம் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண ரீதியாக

# எரிபொருள் பகிர்ந்தளிப்பதில் பொதுமையான அட்டவணை!

## எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் இணையம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 24**

**எரிபொருள் விநியோகத்துக்காக மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடாத வகையில், வடமாகாண ரீதியாக பொதுமையான அட்டவணையொன்று பின்பற்றப்படவேண்டும் - இவ்வாறு வடமாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமை யாளர்களின் இணையம் அரச அலுவலர்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.**

வடமாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் இணையம் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலே இவ்வாறாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் அவர்களின் நிறுவனத்தினரும் பணிப்பாளர்கள் மீது அழுத்தங்களோ, உத்தரவுகளோ பிறப்பிக்காமல் கோரிக்கைகள் மூலமாக அரச திணைக்களங்களோடு இணைந்து செயற்படுவதற்கு விரும்புகின்றனர்.

எந்தவொரு அரச திணைக்களங்களின் கோரிக்கைகளும் மாவட்டச் செயலகம் ஊடாகவே வழங்கப்பட வேண்டும். பொலிஸ், முப்படையினர் மற்றும் அரசதுறை என அனைத்துத் தரப்பினர்களினதும் தனிப்பட்ட கோரிக்கைகள் யாவும் அழுத்தங்களாக உரிமையாளர்கள் மீது திணிக்கக்கூடாது.

சகல பிரதேசங்களிலும் எரி பொருள் பங்கீட்டு அட்டையில் பதிந்தே எரிபொருள் வழங்கப்பட வேண்டும். எரிபொருள் வழங்கும் அளவு மாகாணம் முழுமைக்கும் சகல துறையினருக்கும் அவர்களது பணிகளுக்கு ஏற்றவாறு வழங்கப்படவேண்டும். எரிபொருள் வழங்கும் நாள், நேரம் என்பன மாகாணம் முழுமைக்கும் ஒரே மாதிரி இருக்க ஒழுங்குபடுத்த வேண்டும். எரிபொருள் வழங்குவதற்கான நேர அட்டவணை ஒன்று தயாரிக்கப்படவேண்டும். ஒரு தடவை இறக்கப்படும் எரிபொருளில் இருந்து 600 லீற்றர் எரிபொருளை உரிமையாளர், பணியாளர்கள் அதன் நிறுவனத் தேவைகள் மற்றும் இதர தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் சம அளவில் எரிபொருளைப் பகிர்ந்தளிக்கவேண்டும். எரிபொருள் அளவீட்டுச் சோதனை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தாலேயே மேற்கொள்ளப்படவேண்டும். எரிபொருள் கொள்வனவுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பழைய நிதி நடவடிக்கைகளையே (காசாகவோ அல்லது காசோலைகளாகவோ) பின்பற்ற வேண்டும். இவ்வாறான அனைத்துக் கோரிக்கைகளுக்கும் சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம-14)

## நிமல் மீதான குற்றச்சாட்டை விசாரிக்கக் குழு அமைப்பு!



கொழும்பு, ஜூலை 24

முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரிக்க மூவரடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சராக இருந்த நிமல் சிறிபால டி சில்வா, ஜப்பானிய நிறுவனம் ஒன்றிடம் இருந்து இலஞ்சம் பெற முயன்றார் என்ற குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தது.

அதையடுத்து அவர் அமைச்சுப் பதவியில் இருந்து விலகியதுடன், சுயாதீன விசாரணையொன்றை நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். தற்போது அவருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்த மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

கழிவகற்றலைத் துரிதப்படுத்த

## உள்ளூராட்சி சபைகளுக்கு எரிபொருள் வழங்குங்கள்!

*சாவகச்சேரி சபை உறுப்பினர்கள் கோரிக்கை*

சாவகச்சேரி, ஜூலை 24

எரிபொருள் தட்டுப்பாட்டால் உள்ளூராட்சி சபைகளால் நிறுத்தப்பட்டு வருகின்ற கழிவகற்றல் பணிகளைத் துரிதப்படுத்த உள்ளூராட்சி சபைகளுக்குத் தேவையான எரிபொருளை ஒவ்வொரு வாரமும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை அமர்வில் கோரிக்கை முன்வைக்கப்பட் டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை அமர்வு தவிசாளர் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றபோதே சபை உறுப்பினர்களால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டால் கழிவகற்றல் வாகனங்களுக்கு டீசல் இல்லாததால் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அனைத்துப் பகுதிகளிலும் கழிவுகள் தேக்கமடைவதைக் காணக்கூடியதாகவுள்ளது. தற்போது எரிபொருள் விநியோகம் சீராகி வரும் நிலையில் யாழ். மாவட்ட எரிபொருள் நிலையங்களுக்குக் கொண்டுவரப்படும் எரிபொருளை உள்ளூராட்சி சபைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்க மாவட்டச் செயலர் மற்றும் பிரதேச செயலர்கள் ஊடாக எரிபொருள் நிலையங்களுக்கு அறிவிக்கப்படவேண்டும். அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்கு தேவையான எரிபொருளை ஒதுக்கி வழங்கினால் கழிவுகள் தேக்கமடையும் நிலை ஏற்படாது என உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். (ச-9)

## பரந்தன் எரிபொருள் நிலையத்தில் குழப்பம் விளைவித்த மூவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி பரந்தன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழப்பம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் மூன்று சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பரந்தன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் அட்டைக்கு நேற்றுமுன்தினம் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட வேளை, எரிபொருள் நிலையத்தில் நின்ற மூன்று நபர்கள் வாகன இலக்க அடிப்படையில் தங்களுக்கு எரிபொருள் வழங்க வேண்டுமென்று வீதியை மறித்து குழப்பத்தை ஏற்படுத்தினர். இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. அதன்போது எரிபொருள் நிலையத்துக்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார், நடைமுறையிலுள்ள எரிபொருள் அட்டையை மீறி எரிபொருள் பெறமுற்பட்டமை, மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குறித்த மூவரையும் கைது செய்தனர். (ம-14,113)

## வலிகாமம் மேற்கில் விரைவில் இரண்டாவது நிரப்பு நிலையம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் புதியதொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சங்கானை பலநோக்கு கூட்டுறவுசங்கத்தின் மூலம் மட்டுமே குறித்த பகுதியில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதனையடுத்து வலி. மேற்கு சபை மூலம் வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைப்பதற்கு வடமாகாண ஆளுநருக்கு சபையால் கடிதம் அனுப்பப்பட்ட நிலையில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைப்பதற்கு ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளதாக சபையின் உபதவிசாளர் சச்சிதானந்தம் தெரிவித்தார். (ம)

## 17 லீற்றர் டீசலைப் பதுக்கி விற்பனை செய்தவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 24

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு பகுதியில் 17 லீற்றர் டீசலை பதுக்கி விற்பனை செய்த குற்றச்சாட்டில் கடந்த வியாழக்கிழமை சுன்னாகம் பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் டீசல் பதுக்கப்பட்டு கறுப்புச் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது என சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 17 லீற்றர் டீசலைக் கைப்பற்றினர்.

அத்துடன் அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பத்தலைவர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## கிளி. ஆசிரியர்களுக்கு எரிபொருள் வழங்க கல்வி வலயம் நடவடிக்கை எடுக்கவில்லை!

*இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் குற்றச்சாட்டு*

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கரைச்சிக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எரிபொருளைப் பெற்றுக்கொடுக்க கல்வி வலயத்தினர் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் இதுவரையில் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கரைச்சி கோட்டத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு எரிபொருளை பெறுவதற்கான எரிபொருள் அட்டையை வழங்குவதற்கு கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என எமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆசிரியர்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதற்குக் கரைச்சிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் மற்றும் கிளிநொச்சி தெற்கு கல்வி வலய பணிப்பாளர் ஆகியோரே முழுப் பொறுப்பாகும். ஆகவே இந்த விடயத்தில் கவனம் செலுத்தி ஆசிரியர்களுக்கு எரிபொருள் அட்டையை வழங்கி எரிபொருள் பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகளை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு கண்காணிக்க வேண்டும் - என்றார். (ம-14,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பெரமுனவின் பிரதிநிதி!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சர்வகட்சி (?) அரசாங்கம் நேற்றுமுன்தினம் பதவியேற்றிருக்கின்றது. சர்வதேசத்தைக் கவரக்கூடிய வகையிலும், அதன் நம்பிக்கையைப் பெறக்கூடிய வகையிலும் சர்வகட்சி அரசாங்கத்தை ரணில் விக்கிரமசிங்க அமைப்பார் என்ற எதிர்பார்ப்பு கொஞ்சம் இருக்கவே செய்தது. ஆனால், அந்த எதிர்பார்ப்புகளை தவிடுபொடியாக்கும் வகையில் அமைந்துள்ளது ரணிலின் அமைச்சரவை.

அமைச்சரவையில் புதியவர்கள் என்றோ அல்லது மாற்றத்தை ஏற்படுத்த வல்லவர்கள் என்றோ எவரும் இல்லை. பதவிக் காலத்தில் எந்தக் காத்திரமான திட்டத்தையும் முன்வைக்காமல் பதவியை வீணாகக் கழித்து – நாட்டைப் படுகுழிக்குள் தள்ளிய அதே பழைய தோல்வி முகங்களே அமைச்சரவையை மீண்டும் அலங்கரித்துள்ளன. ஆதலால், இந்த அமைச்சரவை நாட்டுக்கு மீண்டும் சுமையேற்றப்போகின்றதே தவிர, மக்களின் சுமைகளை இறக்கிவைக்க அதனால் முடியாது. அதற்கான குறைந்தபட்சத் தகுதிகூட இந்த அமைச்சரவைக்குக் கிடையாது.


இத்தனைக்கும், ராஜபக்சக்களின் கையாலாகாத காலத்தில் சாதாரண ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, இதே அமைச்சரவையில் உள்ள பல முகங்களை ரணில் கடுமையாக விமர்சித்தார். அமைச்சரவையில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தவேண்டும் என்றும் சொற்ப அளவான அமைச்சர்களுடன் அமைச்சரவை அமைக்கப்படவேண்டும் என்றும் அவர் தொடர்ந்து வலியுறுத்தினார். அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் நாட்டின் பணம் வீணாக வாரியிறைக்கப்படுகின்றது என்பது ரணிலின் விவாதமாக இருந்தது. ஆனால், தற்போது நடந்ததென்ன? எந்த அமைச்சர்களை அவர் விமர்சித்தாரோ அதே அமைச்சர்களை மீண்டும் அமரவிட்டிருக்கின்றார். அமைச்சர்களின் எண்ணிக்கையும் நினைத்ததைப் போன்று மட்டுப்படுத்தப்படவில்லை. இன்னும் சிலர் அடுத்துவரும் நாள்களில் அமைச்சுப் பதவியை ஏற்க இருப்பதால், வீங்கிப் பருத்த ஒரு அமைச்சரவையே ரணிலின் காலத்திலும் தொடரப் போகின்றது.

பொதுமக்களின் எதிர்ப்பைக் கையாள்வதற்காக – நீர்த்துப்போகச் செய்வதற்காக எவ்வாறு கோத்தாபய ராஜபக்ச அமைச்சர்களை மாற்றியமைத்து சங்கீதக்கதிரை விளையாட்டில் ஈடுபட்டாரோ, அதே வழியில்தான் ரணிலும் தற்போது பயணப்படத் தலைப்பட்டுள்ளார். ஆனால், இதை விட்டால் ரணிலுக்கு வேறு வழியும் இல்லை. காரணம் ரணிலுக்கு நாடாளுமன்றப் பலம் அறவே இல்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் பெரமுனதான் ரணிலை தற்போது ஜனாதிபதியாக்கி தன்னைத் தற்காத்துள்ளது. பெரமுனவின் விருப்பங்களுக்கு மாறாக ரணில் நடந்துகொண்டால் அவரது பதவி ஊசலாடத் தொடங்கிவிடும். ரணிலுக்கு எதிரான தீர்மானத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, கூட்டமைப்பு என்பனவும் ஓரணியில் நின்றுகொள்ளும். ஆக, பெரமுனவுக்குக் காட்டும் விசுவாசமே ரணிலின் ஜனாதிபதிக் கதிரையின் ஆயுளைத் தீர்மானிக்கும்.

இவ்வாறானதொரு நெருக்குவார நிலையில் நின்றுகொண்டு பெரமுனவின் ஆதிக்க சக்தியைத் தாண்டிய ஓர் அமைச்சரவையை ரணிலால் எவ்வாறு அமைத்துவிட முடியும்? பெரமுனவுக்கு எதிரான நகர்வுகளை ரணிலால் எவ்வாறு மேற்கொள்ள முடியும்? தற்போது ரணில் என்பவர் ஓர் அடையாள முத்திரை மட்டுமே. மற்றும்படி அவருடைய திட்டங்கள், நகர்வுகள் என்பவற்றை பெரமுனதான் தீர்மானிக்கின்றது – தீர்மானிக்கும். அதற்கு ஆகச்சிறந்த உதாரணம் இந்த அமைச்சரவை. மைத்திரி – ரணில் கூட்டாட்சிக் காலத்திலும், அதற்கு முன்னரும் சர்வதேசத்தில் ரணிலுக்கு ஏற்பட்டிருந்த விம்பத்தை வைத்து தற்போது ஓரிரு உதவிகள் சர்வதேசத்தில் இருந்து உடனடியாகக் கிடைத்தாலும், அந்த நிலை நீடித்து நிலைக்குமா? என்றால் 'இல்லை'என்பதே ஒற்றைப்பதில்.

### நாளொரு நல்வார்த்தை

"கவலைகளை நினைத்து கண்ணீர் சிந்துவதை விட இலட்சியத்தை நினைத்து உதிரம் சிந்துவது மேலானது."
- **பகத்சிங்**




# மேலும் 12 அமைச்சர்களை நியமிக்கவுள்ளார் ரணில்!

## 30 ஆகின்றது அமைச்சர்கள் எண்ணிக்கை

**கொழும்பு, ஜூலை 24**

**ரணிலின் அமைச்சரவையில் 18 அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் பதவியேற்றுள்ள நிலையில், மேலும் 12 அமைச்சர்களை நியமித்து அமைச்சர்களின் எண்ணிக்கை 30ஆக உயர்த்தப்படவுள்ளது என்று கொழும்பு அரசியலில் தகவல்கள் வெளிவந்துள்ளன.**

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். இதனடிப்படையில், சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை 30ஆகவும் பிரதிய மைச்சர்களின் எண்ணிக்கையை 32 ஆகவும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான பேச்சுக்களை அரசியல் கட்சிகளுடன் மாத்திரமின்றி போராட்டக்காரர்களுடனும் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த சிலருக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்கவுள்ளன. இவர்களில் மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன், பழனி திகாம்பரம் ஆகியோருக்கும், ஜீவன் தொண்டமானுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என்று தெரியவருகின்றது.

அத்துடன் நிதியமைச்சர் பதவியை ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் வைத்திருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. (ம)

# கியூ.ஆர். முறைமை கொழும்பில் வெற்றி

கொழும்பு, ஜூலை 24

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையானது கொழும்பில் இரண்டு இடங்களில் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டுள்ளது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கியூ.ஆர். முறைமை கொழும்பில் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த எரிபொருள் அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் எரிபொருள் சோதனைஅடுத்தடுத்த நாள்களில் இடம்பெறும்.

இதேவேளை, மற்றுமொரு பெற்றோல் அடங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளதோடு அதன் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துபுரம், சாந்தபுரம்

# பாலத்தைச் சீரமைக்குமாறு மாணவர்கள் போராட்டம்!

**முல்லைத்தீவு, ஜூலை 24**
**புதுக்குடியிருப்புப் பிரதேசசபைக்குட்பட்ட இந்துபுரம், சாந்தபுரம் கிராமங்களின் இணைப்புப் பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு அந்தப்பகுதி மாணவர்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இந்துபுரம், சாந்தபுரம் கிராமங்களை இணைக்கும் பாலத்தில் அபிவிருத்தி வேலைகள் கடந்த மார்ச் மாதம் புதுக்குடியிருப்புப் பிரதேசசபையால் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், இன்றுவரை பாலம் சீரமைக்கப்படவில்லை.

இதனால் இவ்விரு கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கும் பொதுமக்கள் தேவையின் நிமித்தம் செல்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன் மழைகாலங்களில் பாலமூடாக பிரதான வீதிக்குப் பயணிக்க முடியாததால் பல கிலோமீற்றர் சுற்றி பிரதான வீதியைச் சென்றடைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்தே பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு கோரி மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நேற்றுமுன்தினம் முன்னெடுத்தனர். (ம-14,113)

## வலி.கிழக்குப் பிரதேசசபையின் குடிதண்ணீர் விநியோகமும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
எரிபொருள் தட்டுப்பாட்டால் வலி.கிழக்குப் பிரதேசசபையின் குடிதண்ணீர் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. வலி.கிழக்குப் பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசங்களுக்கு பிரதேசசபையால் குடிதண்ணீர் பவுஸர் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தது.
ஆனால் தற்போது பிரதேசசபையின் குடிதண்ணீர் விநியோக பவுஸருக்கு டீசல் இல்லாததால் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது என்று வலி.கிழக்குப் பிரதேசசபை தெரிவித்துள்ளது. எனினும் இருபாலைப் பகுதி மக்களுக்கு நிரந்தர குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை- பிரதேசசபையின் கழிவகற்றல் பணியும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14-17)



## ஸ்ரான்லி வீதிக் கால்வாயின் கழிவுகள் அகற்றப்படவில்லை

### பொதுமக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்.மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட ஸ்ரான்லி வீதியின் கால்வாய்க்குள் கழிவுகள் பல நாள்களாக அகற்றப்படவில்லை என்று பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
அத்துடன் கழிவுகள் தேங்கிக்காணப்படுவதால் ஸ்ரான்லி வீதியிலுள்ள வியாபாரிகளும் கடைகளுக்கு வருவோரும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் இது தொடர்பில் மாநகரசபைக்கு முறையிடப்பட்டபோதிலும் ஒரு முறை மாத்திரமே கழிவுகள் அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணனைத் தொடர்புகொண்டபோது, ஸ்ரான்லி வீதியின் கால்வாய், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரியதாகக் காணப்படுவதால் கழிவகற்றும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையே மேற்கொள்கின்றது. எனினும் பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு உடனடியாகக் குறித்த கால்வாய்க் கழிவுகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம் என்று தெரிவித்தார்.
அதனையடுத்து இது தொடர்பில் யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பொறியிலாளர் சுதாகரைத் தொடர்புகொண்டபோது, கால்வாய்த் துப்புரவை மாநகரசபையுடன் இணைந்தே நாம் மேற்கொள்கின்றோம். ஏனெனில் கழிவகற்றும் பணியாளர்கள் மாநகரசபையிடமே காணப்படுகின்றனர். வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் பணியாளர்களால் கால்வாயின் கொங்கிறீற் மேற்தளக்கழிவுகள் மட்டும் அகற்றப்படும் என்று தெரிவித்தார். (ஒ-14-125)



### சில்லாலை புனித யாகப்பர் ஆலய

## புதிய பங்கு பணிமனை யாழ். ஆயரால் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
சில்லாலை புனித யாகப்பர் ஆலய புதிய பங்கு பணிமனை யாழ். ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில் இரண்டாம் நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய பங்கு பணிமனை திறந்து வைக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு ஆலய பங்குத்தந்தை அருட்பணி பாலதாஸ் பிறையன் தலைமையில் ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படவுள்ளது. (ச-20)

### கோரக்கன்கட்டு விவசாயிகளுக்கு

## காணி வழங்காமைக்கு உடனடித் தீர்வு எட்டப்படும்

### றூபவதி கேதீஸ்வரன் உறுதி

கிளிநொச்சி, ஜூலை 24
கிளிநொச்சி - கோரக்கன்கட்டு விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கு காணி வழங்கப்படாதமைக்கு உடனடியாகத் தீர்வு எடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்டச்செயலர் றூபவதி கேதீஸ்வரன் விவசாயிகளுக்கு உறுதியளித்துள்ளார்.
இரணைமடுக்குளத்தின் கீழுள்ள 100 ஏக்கர் வீதமான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.
இந்த ஆண்டு நெற்செய்கைக்கு இதுவரை இரணைமடுக்குளத்தின் கீழ் உட்படாத கோரக்கன்கட்டுப் பகுதியும் உள்வாங்கப்பட்டு செய்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் கோரக்கன்கட்டுப் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பல விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைக்கான காணிகள் வழங்கப்படாமல் கோரக்கன்கட்டு கமக்கார அமைப்பின் தலைவர் மற்றும் அவரது குடும்பத்தினர் மாத்திரமே முற்று முழுதாக சிறுபோக செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று மாவட்டச்செயலர், பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அந்தப்பகுதி விவசாயிகளால் முறைப்பாடு மனுவொன்று கையளிக்கப்பட்டது.
அத்துடன் இதனால் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் அவர்களின் வாழ்வாதாரத்துக்காக பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான அனுமதிகள் வழங்கப்படவில்லையென்பதையும் மாவட்டச்செயலருக்குத் தெரிவித்தனர்.
இதன்போதே விவசாயிகள் முன்வைத்த முறைப்பாடு உடனடியாக ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்டச்செயலர் உறுதியளித்தார். (ஒ-14-113)

## கிளாலி புனித யாகப்பர் ஆலய தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 24
கிளாலி புனித யாகப்பர் யாஸ்திரை ஆலய வருடாந்த தேர்த் திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளது.
கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திருவிழாவில் எதிர்வரும் 24ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை திருவிழா திருப்பலி இடம்பெறவுள்ளது.
மறுநாள் 25ஆம் திகதி காலை புனிதரின் திருவிழா திருப்பலியும் தொடர்ந்து தேர்ப்பவனியும் இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-63)

## இலவச குடிதண்ணீர் நடமாடும் சேவை

முல்லைத்தீவு, ஜூலை 24
ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தண்டுவான் கே/125 கிராம அலுவலர் பிரிவிலும், பெரிய இத்திமடு கே/126 கிராம அலுவலர் பிரிவிலும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வீட்டுப் பாவனையாளர்களுக்கான இலவச குடிதண்ணீர் விநியோகத்துக்கான நடமாடும் சேவை மேற்கொள்ளப்படவுள்ளது.
அதற்கமைய எதிர்வரும் 26ஆம் திகதி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள் குறித்த கிராம அலுவலர் பிரிவு பொதுமக்களின் வீடுகளுக்கு வருகை தந்து இதற்கான விண்ணப்பப் படிவங்களை வழங்கவுள்ளனர்.
விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்கின்ற பொதுமக்கள் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அவற்றைப் பூர்த்தி செய்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதியன்று தண்டுவான் கிராம அலுவலர் அலுவலகத்தில் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கையளிக்க வேண்டும். எனவே பொதுமக்கள் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-14,214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் சர்வதேச விஞ்ஞான மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தால் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் 'விஞ்ஞானம்' சர்வதேச ஆய்வு மாநாடு, மேற்கு நோர்வே பிரயோக விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்புடன் "புதிய இயல்பு நிலையில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை முன்னிறுத்தல்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகள் வரிசையில் இடம்பெற்ற விஞ்ஞான மாநாட்டில் நோர்வே, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியாவின் பிரபல்யமான பல்கலைக்கழகங்களை சேர்ந்த விஞ்ஞானப் பேராசிரியர்கள் இணைய வழியில் தமது கருத்துரைகளை வழங்கினர்.



உயிரியல் விஞ்ஞானம், இரசாயன பௌதிக விஞ்ஞானம், கணினி தகவல் தொழில்நுட்பம், சக்தி சூழலியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கணிதம் புள்ளிவிவரவியல், விஞ்ஞானக்கல்வி போன்ற உப தலைப்புக்களில் சர்வதேச மற்றும் இலங்கை ஆராய்ச்சியாளர்களால் 43 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. நோர்வே நாட்டின் இலங்கைத் தூதரகம், நோர்வேயின் திறன் மற்றும் உயர்கல்விக்கான பணிப்பாளர் அலுவலகம் என்பனவற்றின் நிதிப்பங்களிப்பில் இந்த மாநாடு இடம்பெற்றது. (ஓ-14,20)

# கர்ப்பிணிகளுக்கு போசாக்கு உணவு

சாவகச்சேரி, ஜூலை 24

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணிகளுக்குப் போசாக்கு உணவுகள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் அண்மையில் வழங்கப்பட்டன.

மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தால் புழுங்கல் அரிசி, தீட்டல் அரிசி, பருப்பு, உளுந்து, கடலை, பயறு, கௌபி, தேங்காய், தேங்காய் எண்ணெய், பால்மா, முட்டை, பேரீச்சம்பழம் மற்றும் சீனி போன்ற போசாக்கு உணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

மந்தபோசணையுள்ள கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தேவையான நாளாந்த போசணைக்கான உலர் உணவுப்பொதிகள் சுகாதாரத் திணைக்களப் போசாக்கு நிபுணர்களின் பரிந்துரைக்கமைய வழங்கப்பட்டன. (ஓ-14,9)



# எரிபொருள், உரத்தட்டுப்பாடு தர்ப்பூசணிச்செய்கை பாதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி, மயில்வாகனபுரம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட தர்ப்பூசணிச் செய்கை உரம் இல்லாமையாலும் உரத்தட்டுப்பாட்டாலும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எரிபொருள் தட்டுப்பாடும் ஒரு காரணம் என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அறுவடை செய்த தர்ப்பூசணிகள் சந்தைப்படுத்த முடியாத நிலையில் தேங்கிக் காணப்படுகின்றன. ஏனெனில் எரிபொருள் தட்டுப்பாட்டால் தர்ப்பூசணியைக் கொள்வனவு செய்ய வியாபாரிகள் வருவதில்லை. கொள்வனவு செய்ய வரும் வியாபாரிகள் குறைந்த விலையிலே கொள்வனவு செய்கின்றனர். இதனால் அறுவடைக்குரிய இலாபத்தைப் பெறமுடியவில்லை. அத்துடன் அறுவடை செய்யாத நிலையில் காணப்படும் தர்ப்பூசணிகள் பல பழுதடைந்து வருகின்றன என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ஓ-14,113)

# பலத்த மழையுடன் காற்று வீசக்கூடும்!

கொழும்பு, ஜூலை 24

திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கு மேல் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதுகுறித்து வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையில்;

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது தென் மேற்கு திசையில் வீசக்கூடுவதுடன், காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 25-40 கிலோமீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும். அத்துடன் கடல்நிலையானது புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது கொந்தளிப்பாக காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமானதாக இருக்கும்.

எனவே காற்று, மழை, கொந்தளிப்புத் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-14,இ)

# யோகக்கலை கற்கைநெறி தற்காலிகமாக இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் இலவசமாக நடத்தப்பட்டு வரும் யோகக்கலை கற்கைநெறி தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்படுகிறது என இளைஞர் விவகார அலகின் உதவிச்செயலாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதி முதல் திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தற்போது நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இந்தக் கற்கைநெறி இடம்பெறுகின்றது. எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகவுள்ள நிலையில் திருவிழாக் காலங்களில் வீதித்தடைகள் போடப்படுவதால் யோகா வகுப்புக்களை நடத்த முடியாத தன் காரணமாகவே இந்தத் தற்காலிக இடமாற்றம் மேற் கொள்ளப்படுகிறது என மேலும் தெரிவித்தார். (ச-23)

# சாவகச்சேரி நகரசபையின் பணிகளை உடனடியாக செயற்படுத்த வேண்டும்

## சபை உறுப்பினர்கள் கோரிக்கை

சாவகச்சேரி, ஜூலை 24

சாவகச்சேரி நகரசபையின் இந்த ஆண்டு வரவு -செலவுத்திட்டத்தில் முன்மொழி யப்பட்ட வேலைத்திட்டங்களை உடனடியாக செயற்படுத்த வேண்டுமென சபையின் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சாவகச்சேரி நகரசபையின் அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது உறுப்பினர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

காலநீடிப்பில் வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகள் எந்த நேரமும் கலைக்கப்படும் அபாயம் உள்ளதால் இதுவரை திட்டம் போதைய உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

அதன்படி முன்மொழியப்பட்ட அபிவிருத்தி வேலைகள் மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் சில வேலைத்திட்டங்களை மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட நிதி போதாமையால் உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வீதி புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்படவில்லை.

அதற்காக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை மாற்றி தற்போதைய விலைக்கு ஏற்றவாறு மதிப்பீடு தயாரித்து அந்த வேலைத்திட்டங்களை இடைநிறுத்தி அந்த நிதியையும் இணைத்து மதிப்பீடு தயாரித்து இந்தப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர். அதற்குப் பதிலளித்த தவிசாளர், மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக புதிய மதிப்பீட்டுப் பட்டியல் அனுப்பப்படுமென உரிய அதிகாரி களால் தெரிவிக்கப்பட்ட போதிலும் இன்னும் அனுப்பப்படவில்லை.

மதிப்பீட்டுப் பட்டியல் கிடைத்ததும் ஒதுக்கப்பட்ட நிதிக்கேற்ப அளவுகளை மாற்ற அல்லது உறுப்பினர்களால் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு ஒதுக்கீடு செய்திருந்தால் அதையும் ஒன்றாக்கி புதிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலைகளை ஆரம்பிக்க முடியுமெனத் தெரிவித்தார். (ஓ-14, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

வத்தளையில் அமைந்துள்ள சிறிய குடும்பத்திற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை 25 - 40 வயதிற்குட்பட்ட தங்கி அல்லது காலை 8 முதல் மாலை 5 மணி வரை தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

(ACo 19100) (3/6) **077 346 7000**

## உடனடி பணி ஆள் [பெண்] தேவை

மட்டகளப்பில் 70 வயது நிரம்பிய அம்மா ஒருவரை வீட்டில் தங்கி இருந்து கருணையுடனும், பொறுமையுடனும் பராமரிக்கவும் / கவனிக்கவும் பணிப்பெண் ஒருவர் உடனடியாக தேவை.

- மாதம் 30, 000 சம்பளம்
- வயது 40+ பெண்
- தங்மிகுடம், உணவு இலவசம்

**தினமும் செய்ய வேண்டிய வேலைகள்**

- Toilet அழைத்து செல்லுதல், குளிப்பாட்டுதல், துப்பரவாக வைத்திருத்தல்.
- நேரத்திற்கு உணவும், மருந்தும் வழங்குதல்.
- நடை பயிற்சிக்கு அழைத்தல் செல்லுதல்.
- வீட்டை துப்பரவாகவும் நேர்த்தியாகவும் வைத்திருத்தல்.
- சமையல் இல்லை, உணவு வீட்டிற்கு Delivery செய்யப்படும்.

விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் இடங்கள் இலங்கை முழுவதும்

**074 112 6208, 074 011 6552** (CR 36688) (3/6)

## A/L இணைந்த கணிதம்

A/L 2022, 2023,2024 மாணவர்களுக்கு வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

**074 111 0790**

## வீடு வாடகைக்கு உண்டு

கோண்டாவில் சந்திக்கருகாமையில் 4 அறை, வாகன தரிப்பிடம், பெரிய காணியுடன் வாடகைக்குண்டு.

T.P.: **074 270 8944**
Whatsapp: **044 783 866 3885**

## மணமகள் தேவை

1983 யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வடமாராட்சி பூரட்டாதி கும்பம் MSc.Ergi.UK. உயர் கல்வி கற்ற மணமகனிற்கு பண்பான மணமகள் தேவை.

**077 691 4298, 077 342 7645** (CS 20028) (2/6)

## வீடு வாடகைக்கு

யாழ்நகரில் சத்திர சந்திக்கும் கொட்டடிச் சந்திக்கும் இடையில் கடைக்கு மேல் மாடியில் அமைந்துள்ள வீடு உடன் வாடகைக்குண்டு.

**021 222 4137, 077 071 3048**

## பணிப்பெண் தேவை

தங்கி இருந்து வீட்டுவேலை பார்க்க பணிப்பெண் தேவை. விபரங்களுக்கு

**077 298 7506**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, சாயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்துரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

**நியூ லங்கா பாம்**
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வேலையாள்கள் தேவை

சைவ உணவகத்திற்கு சமையல் வேலை தெரிந்தோர், வடை பலகாரங்கள் செய்யத் தெரிந்தோர், ரொட்டி Maker, சப்பிளையர், Bill Maker போன்றோர் தேவை.

ஆனைக்கோட்டை **077 055 6949**

## வேலையாள் தேவை

முன் அனுபவமுள்ள Computer Typing (Tamil & English) தெரிந்த அலுவலகம் ஒன்றில் பணி புரிவதற்கு வேலையாள் தேவைப்படுகின்றது.

தொடர்பு: **071 157 3725**
(CV யை அனுப்பவும்)

## 29ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 13 . 02 . 1929



உதிர்வு 20 . 12 . 1993

திதி: ஸப்தமி

**இளையதம்பி கந்தசாமி**

## 25ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 . 11 . 1961



உதிர்வு 30 . 07 . 1997

திதி: ஏகாதசி

**மைதிலி கந்தசாமி**

## 8ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 15 . 01 . 1930



உதிர்வு 09 . 03 . 2014

திதி: நவமி

**கந்தசாமி மங்கையர்க்கரசி**

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும் கண்விட்டு மறையாமல் காலமெல்லாம் எம்மோடிருப்பீர்கள்

ஞானபண்டித பாடசாலை அருகில்,
கொக்குவில் மேற்கு.

(CS 20061) (3/6)


நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

# FIBER LASER CUTTER WORK

**எங்களிடம் சகலவிதமான உலோகதகடுகளிலும் மற்றும் உலோக பைப் வகைளும் Design வெட்டிக்கொடுக்கப்படும்.**

- Carbon Steel
- Mild Steel
- Stainless Steel
- Brass
- Cast Lorn
- Wrought Lron
- Aluminum
- Copper
- Zinc
- Lead
- Alloy Steel
- Titanium

HIGH QUALITY
2000 W-POWER



**உங்களுக்கு விரும்பிய டிசைன்களில் Fiber Laser Cutter வேலைகள் செய்து தரப்படும்**



Thickness of Cutting Material - 01 to 20 mm
Working Area (Length x Width) - 3000 x 1500 mm

**ARISSONA** (PVT) LTD
ADVERTISING & PUBLICATION
93, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 3222, 076 141 9307
www.arisona.com | info.arisona.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 07 . 1948

இறப்பு 22 . 07 . 2022

## குமாரசாமி நாகரத்தினம் (ராணி)

நவாலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி நாகரத்தினம் (ராணி) அவர்கள் நேற்று முன்தினம் (22.07.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல.209, நவாலி வடக்கு, மானிப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குமாரசாமி நாகரத்தினம் (ராணி)
குடும்பத்தினர்

இல. 209, நாவலி வடக்கு,
மானிப்பாய்.

(cs45657) (2.6)

# வேலையாட்கள் தேவை

அண்மையில் மேலும் விஸ்தரிக்கப்பட்ட அலுவலகத்தை யாழ்.குடா நாட்டில் உருவாக்கிய பல்தேசியக் கம்பனியாகிய **Hutch** நிறுவனத்தில் யாழ்.குடாநாடு மற்றும் வடமாகாணத்தில் பின்வரும் உடனடி வெற்றிடம் காணப்படுகின்றது.

● விற்பனைப் பிரதிநிதி (DSR) SIM ● அட்டை விற்பனைப் பிரதிநிதி (FL)

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் நல்லூர் உற்சவ காலப் பணிகளில் கடமையாற்றுவதற்கும் ஊழியர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

உரிய சம்பளம் (சுயவிபரக் கோவையுடன்) நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

அரசடி வீதி,நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(ஜனசக்தி சனசமூக நிலையம் முன்பாக)

தொடர்புகளுக்கு : 078 5000 980
078 5000 580
078 696 7101

# 22ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 26 . 08 . 1937

மறைவு 24 . 07 . 2000

## அமரர் அம்பலவாணர் குலசேகரம் (J.P)

(இளைப்பாறிய நூலகர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)

என்றும் உங்கள் நினைவுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

கைதடி, நுணாவில்.
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்.

(CS 45640) (3/6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 29 - 06 - 1944

இறப்பு 23 - 07 - 2022

## திரு.வயிரவி செல்லத்துரை

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

வேரவல் இளவாலை வடக்கு, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வயிரவி செல்லத்துரை நேற்று (23.07.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வயிரவி - தெய்வானை தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும், திருமதி கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், அகிலன் (பொறியியலாளர், அமெரிக்கா), அகல்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), பிரசாத் (பொது வைத்திய நிபுணர், கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்திய சாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், மலர்மகள் (பொறியியலாளர், அமெரிக்கா), ஜனார்த்தனன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப்பளை), ஜெயவதனி (வைத்தியர், கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபினன், ஆரணன் (அமெரிக்கா), திவ்யா, லாறண்யா, தரண்யா (மகாஜனக் கல்லூரி), பிரகவி ஆகியோரின் அன்புப் பேரனும், தங்கப்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரனும், ராமச்சந்திரன் (நாதன்), காலஞ்சென்றவர்களான வடிவாம்பிகை, வாமதேவன் மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

021 221 1996

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

"நாம் பிழைத்தாலும், கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம் ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" ரோமர் 14:8



தோற்றம் 06 - 03 - 1940

மறைவு 22 - 07 - 2022

## திருமதி எலிசபெத் சற்குணதேவி கருணைராஜ்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபெத் சற்குணதேவி கருணைராஜ் அவர்கள் (22.07.2022) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்..

அன்னார் காலஞ்சென்ற அருட்திரு.சின்னத்தம்பி சாமுவேல் கருணைராஜ் அவர்களின் அன்பு மனைவியும், அரியலா நிஷாந்தி (கீழ்ப்பிரிவு பகுதித்தலைவர் - பரிதோமா கனிஷ்ட பாடசாலை), நீல் நிஷாந்தன் (வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் H.N.B) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருச்செல்வநேசம் லோகராஜ், பிரின்சி ஊர்மிலா கருணைராஜ் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான யோசுவா சின்னப்பொடியார் வேலுப்பிள்ளை, சார்லட் பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சொலமன்பால் சின்னத்தம்பி, விக்டோரியா அருளம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஜோன் சற்குணம், நைல்ஸ் நற்குணம் எஸ்தர் சகுந்தலாதேவி, வில்சன் ஞானகுணம், நெல்சன் நேசகுணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நொயலீன் நகுலேஸ்வரி, ஐவோர் ஜெயகுமார் ஸ்டீஃபன்ஸ், எமிபெல் விமலாந்தி, அமிர்தமலர் சின்னத்தம்பி, காலஞ்சென்றவர்களான சோபி சின்னத்தம்பி, விக்டர் கிருபைராஜ், ரெஜினோல்ட் சின்னத்தம்பி, கருணாவதி தோமஸ், செபமணி கந்தையா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கேஷியாலக்ஷி லோகராஜ், அரியேல் மதுஷனன் லோகராஜ் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், மார்க் மைத்ரன் கருணைராஜ், எய்டன் அபிஷான் கருணைராஜ் ஆகியோரின் அன்பு அப்பம்மாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை இல. 54/19 விதானையார் வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணி முதல் வைக்கப்பட்டு, மாலை 3.30 மணிக்கு இறுதி நல்லடக்க ஆராதனை நடைபெறும். அதனைத் தொடர்ந்து திருவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : நிசாந்தன் கருணைராஜ் - 077 732 3405
நிசாந்தி லோகராஜ் - 077 732 3406

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 05 . 1936



மறைவு 04 . 08 . 2021

அமரர் வேலும்மயிலும் சோமசுந்தரம்

(Retired Chief Accountant)

ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம்
எங்கள் அன்புத் தந்தையே!
உங்கள் அன்பு வார்த்தைகளும்
பாசமிகு நினைவுகளும் என்றும்
எங்களை விட்டு நீங்காது

உங்கள் ஆத்மா சாந்தியடைந்து இறைவனடி சேர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
ஆருயிர் மனைவி (கௌரி), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்

(CS 45631) (3/6)

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 . 09 . 1948



உதிர்வு 14 . 08 . 2016

திருமதி செல்லத்துரை பாக்கியம் (கிளி)

அன்பு வைப்பதில் அரசி அகிலத்திற்கும் அதிபதி
அன்போடு பழகி அனைவரையும் அரவணைத்து
அன்பை கற்றுத்தந்தவள் அம்மா...! அறிவை தந்தவளும்
அதில் அக்கறை கொண்டவளும் நீங்கள் தானே அம்மா.
அற்புதமான இனிய வாழ்வை எமக்கு அளித்த அம்மாவே
அதில் எம்முடன் இன்று அற்றுப்போனதேன் அம்மா!!
ஆறு ஆண்டுகள் சென்றாலும் உம் புத்திரர். புதல்விகளின்
மனதை விட்டு அகல மாட்டீர்கள் அம்மா...!!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
இல. 31, 6 ஆம் ஒழுங்கை வேப்பங்குளம், வவுனியா.

(CS 45631) (3/6)



## ஒப்பந்தம் கைச்சாத்து

யாழ்ப்பாணம், ஜூலை 24
ஊடக மற்றும் தகவல் விளங்கறிவை மேம்படுத்தும் நோக்கில் ஊடக மற்றும் தகவல் விளங்கறிவுக்கான மையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகம் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், ஊடக மற்றும் தகவல் விளங்கறிவுக்கான மையத்தின் சார்பில் மருத்துவ கலாநிதி எம். ஏ. வை. அரபாத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.
(ஒ-14-20)



## மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் பளையில் கைது!

கிளிநொச்சி, ஜூலை 24
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லிப்பளைப் பகுதியில் சட்டவிரோத மணல அகழ்வில் ஈடுபட்ட மூவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பளை விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குப் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய குறித்த பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்தனர்.

அதன்போது, சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று சந்தேகநபர்களைப் பளைப் பொலிஸார் கைதுசெய்தனர். அவர்கள் மணல் அகழ்வுக்குப் பயன்படுத்திய உழவியந்திரங்களும் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.
(ம-14,113)

### வட்டுக்கோட்டையில்
## மணல் அகழ்வு ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 24
வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரைப் பகுதியில் அனுமதியின்றி மணல் ஏற்றிய நபரொருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த கடற்கரைப் பகுதியிலிருந்து உழவியந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்றவரை, சுழிபுரம் பத்திரகாளி கோயில் பகுதியில் வைத்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் மடக்கிப்பிடித்தனர். அதன்போது அனுமதியின்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைதுசெய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-14,27)

## சட்டவிரோத கள் விற்பனை: மானிப்பாயில் 6 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 24
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக கள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஆறு பேர் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை முதலாம் கட்டை பகுதியில் சட்டவிரோத கள் விற்பனை இடம்பெறுகிறது என கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் சோதனையிட்டபோது 30 லீற்றர் கள்ளை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் குறித்த சட்டவிரோத கள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஆறு பேரையும் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபர்களை விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.
(ச-125)



## கலைஞர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
அரச ஊழியருக்காக நடைபெற்ற குறுநாடகப் போட்டியில் தொடர்ந்து மூன்று முறை அரசின் விருது பெற்ற நாடகக் கலைஞர் கிருபாகரனைக் கௌரவிக்கும் நிகழ்வு, இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ந.ரதிதரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 03 - 1959



மறைவு 23 - 07 - 2022

## திரு.கந்தையா யோகநாதன்

கரவெட்டி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வில்லடி பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா யோகநாதன் அவர்கள் நேற்று (23.07.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், லலிதாம்பிகையின் அன்புக் கணவரும், தமயந்தி, சிதம்பரநாதன், பத்மாவதி, வைரவநாதன் (அவுஸ்ரேலியா), ஆனந்தன் (கனடா), கரன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அகல்யா, தர்மினி, பிரதீபன், அனுஷா, காண்டிபன் (அவுஸ்ரேலியா), சுஜந்தன், சயந்தனா (கனடா), டிலக்ஷனா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், குருபரன், அருள், ஜெயானந்தன் (பிரதி அதிபர், யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதித்தன், யதுஷ்மன், கோபிகிருஷ்ணன், கோபிஷா, கபிஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (26.07.2022) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வில்லடி பூநகரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூநகரி பரமன்கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

**சோ.ஜெயானந்தன் (மருமகன்) 077 248 7940**

**மற்றும் குடும்பத்தினர் 076 333 3496**

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 08 . 1945



மறைவு 23 . 07 . 2022

## பஞ்சாட்சரம் சறோஜினிதேவி

பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் சறோஜினிதேவி நேற்று (23.07.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராசா அமுதம் தம்பதியரின் மகளும், நாகலிங்கம் பஞ்சாட்சரம் அவர்களின் பாசமிகு மனைவியும், தங்கராசா, புஸ்பராசா, பாக்கியராசா, புஸ்ப ராணி, பத்மராசா ஆகியோரின் சகோதரியும், வசந்தமலர், வசந்தகுமாரி (பிரான்ஸ்), ஜெயராணி, சந்திரமோகன் (வினோ நகைப் பூங்கா, யாழ்ப்பாணம்), கிருஸ்ண மோகன் (பிரான்ஸ்), துஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பற்குணம், ஆனந்தராசா (பிரான்ஸ்), ரவிச்சந்திரன், ரஜனி, சுகந்தினி (பிரான்ஸ்), ராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வினோதன், நினோகா, ஜந்துசன் (பிரான்ஸ்), தருணிகா (பிரான்ஸ்), நிருஷன் (பிரான்ஸ்), புவிதரன் (பிரான்ஸ்), தர்மிகன், ரதிசியா, சாருன்யன், அஸ்வின், சபினயா, பிறிஸ்ரிகா (பிரான்ஸ்), பாருஷன் (பிரான்ஸ்), கஜிகா, கோபிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பி.ப 1 மணியளவில் இடம்பெற்று, பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**37, பெரியதம்பிரான் வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**
**மகன் - 076 8731511**
**077 115 1581**

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## சிவானந்தம் பரிமளம்

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தம் பரிமளம் நேற்று (23.07.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், திருவருட்செல்வியின் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்) பாசமிகு தாயாரும், கிருபாகரனின் (உதவி ஆணையாளர், ஆட்பதிவுத் திணைக்களம் - வவுனியா) பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற கமலாம்பிகை, கந்தசாமி, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பரமேஸ்வரியின் உடன்பிறவா சகோதரியும், காலஞ்சென்ற ஆனந்தராசா, முத்துலிங்கம் மற்றும் தற்பராசக்தி, இரத்தினசாமி ஆகியோரின் மைத்துனியும், கலைச்செல்வி, ஆதித்தன் ஆகியோரின் பெரிய தாயாரும், மனோகர், பாஸ்கர், சேகர், யசோ, சங்கர், சுபாகர் ஆகியோரின் சிறிய தாயாரும், கடம்பநேசன், சிவநேசன், குகநேசன், இராஜேஸ்வரி, அருள்நேசன், மயூரினி ஆகியோரின் மாமியாரும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அந்தோனியார் வீதி, மாதகல்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 08 . 1945



மறைவு 23 . 07 . 2022

## திருமதி இராமச்சந்திரன் அன்னலட்சுமி (இராசாத்தி)

யாழ்ப்பாணம் கச்சேரியடியை பிறப்பிடமாகவும், தோப்பு அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமச்சந்திரன் அன்னலட்சுமி நேற்று (23.07.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமச்சந்திரனின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான நடராசா, யோகராசா, துரைராசா மற்றும் செல்வராசா, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சந்திரலீலா, காலஞ்சென்ற சந்திரவதனா மற்றும் சந்திரதாஸ் (கணக்காளர் வலயக்கல்வி அலுவலகம், பி.சு.சே.பணிமனை மன்னார்), சந்திரஸ்ரீ, சந்திரலேகா (கனடா), சந்திரபாலா (மு.உ மாநாகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வசந்தராசா, மாதவி (அ.உ தொழில்துறை திணைக்களம்,வடமாகாணம்), சுமதி, காலஞ்சென்ற நிசாந்தன் மற்றும் சர்மினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், லீலாவதி இராசரெட்ணம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சாகித்தியன், சகானன், கோபிகா, மதுசிகன், மதுசகான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தோப்பு அச்சுவேலியில் இன்று (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 621 8396**

**தோப்பு, அச்சுவேலி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கத்தின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்றுமுன்தினம் பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களின் பலவிதமான கேள்விகளுக்குத் தினேஷ் குணவர்தன பதிலளித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்களிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எடுத்த தீர்மானம் தொடர்பில் இனி நாம் பதிலளிப்பது அழகல்ல. எனினும், நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியாகத் தெரிவாகிய அன்று சபையில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, தன்னுடன் இணைந்து பயணிக்க சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்திருந்தார். எனவே, ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட வேண்டும். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியும் நானும் அதீத கவனத்துடன் செயற்படுவோம் - என்றார்.

(அ-ஓ-22)

## நிவாரணத்தோடு...

அரிசி, பால்மா மற்றும் அத்தியாவசிய மருந்துகள் என பல பொருள்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இரண்டு கப்பல்களில் தமிழகத்தில் இருந்து மனிதாபிமான உதவியாக அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய 2 கப்பல்கள் நாட்டுக்கு வந்திருந்தன.

(அ-ஓ-இ)

## இன அழிப்புக்கு...

இலச்சினையையும் வடிவமைத்து வெளியிட்டுள்ளதோடு, பட்டயம் (சாசனம்) ஒன்று எழுதப்பட்டு எதிர்வரும் ஓகஸ்ட் 23 ஆம் திகதிக்கு முன்னதாக வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவு முழுவது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி நிலையைக் காரணம் காட்டி, இன அழிப்புக்கான சர்வதேச நீதியினதோ, இனப்பிரச்சனைக்கான அரசமைப்பின் பாற்பட்ட தீர்வினதோ முக்கியத்துவத்தை எவ்விதத்திலும் சர்வதேச சமூகம் குறைத்து மதிப்பிட பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர் தரப்பு அனுமதிக்கக் கூடாது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் இணைப் பேச்சாளர் க.அருந்தவபாலன் இங்கு கருத்துவெளியிட்டார்.

மனித உரிமை செயற்பாட்டாளரும் பொறியியலாளருமான கலாநிதி எஸ். கணேஸ் (அம்பாறை, மட்டக்களப்பு), மருத்துவக் கலாநிதி கே.ஜெயகாந்தராஜா (திருகோணமலை), நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் (கிளிநொச்சி), முன்னாள் மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன் (யாழ்ப்பாணம்), முன்னாள் மாகாண சபை அமைச்சரும் சூழலியற் செயற்பாட்டாளருமான பொ.ஐங்கரநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் (மட்டக்களப்பு), முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் (வவுனியா), அரசியற் செயற்பாட்டாளர் சண்முகலிங்கம் சஜீவன் (யாழ்ப்பாணம், முல்லைத்தீவு) என்று பலரும் இந்த முன்னெடுப்புக்கான அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டனர். இவர்களில் பலர் உரையாற்றித் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் நாளன்று ஜெனிவாவில் ஆரம்பிக்கவுள்ள மனித உரிமைப் பேரவையின் 51 ஆம் அமர்வுக்கு முன்னதாகச் செயற்படவேண்டும் என்றும், அ... வின் ஆரம்ப நாளன்றே ஜெனிவாவில் ...மிழகத் தலைவர்களோடு அணிதிர...டு ஒன்று கூடி தமிழ்த் தரப்பின் ஒன்றித்த கருத்து முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அழைப்பாளர்கள் தெரிவித்தனர்.

(ஓ-26)

## இ.போ.ச...

அவர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேய அவர்கள் இந்தத் தகவலை வெளியிட்டனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பெறப்பட்ட 57 வழித்தட இ.போ.ச. பேருந்தின் சாரதி மற்றும் காப்பாளர் இருவரும் கல்கமுவ சாலை இ.போ.ச. சாலை ஊழியர்களால் தலாதகம எனும் பகுதியில் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம். இந்த தாக்குதலை நடாத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களே சக ஊழியர்களை தாக்கியது மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலோடு தொடர்புபட்ட ஊழியர்களை உடனடியாக பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டாவிட்டால் இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ். சாலை, வட பிராந்திய சாலைகளுடன் இணைந்து தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுக்கும், என்று எச்சரிக்கை விடுத்தனர்.

(அ-ஓ-20)

# கண்ணீர் அஞ்சலி



வினோ நகைப்பூங்கா ஊழியர் சந்திரமோகன் அவர்களின் அன்புத் தாயார்.

**பஞ்சாட்சரம் சறோஜினிதேவி**

அவர்கள் நேற்று (23.07.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


தோற்றம் 27.08.1945

மறைவு 23.07.2022

பிரிவால் துயருறும்
வினோ நகைப் பூங்கா
உரிமையாளரும், ஊழியர்களும்.

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 09.01.1953



ஆண்டவன் திருவடியில் 19.07.2022

**சிவகுரு புவனேந்திரதாஸ்**

யாழ்ப்பாணம் நல்லூர்வடக்கை பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்தவருமான சிவகுரு புவனேந்திர்தாஸ் அவர்கள் 19.07.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், லக்ஷியின் ஆசை அப்பாவும் பராசக்தி, மோகனதாசன், மனோகரதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன், மொறின், காலஞ்சென்ற நாகேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராணி, நாகேஸ்வரி, அற்புதராணி, காலஞ்சென்ற புஸ்பராணி, நேசராணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் கீழ்குறிப்பிட்ட முகவரியில் 26.07.2022 செவ்வாய்கிழமை பிற்பகல் 1 மணியில் இருந்து 2.30 மணிவரை நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

Funérarium Municipal
28 Rue de Groslay
95160 MONTMORENCY.
France.

தொலைபேசி இலக்கம்
0777350793.
0778502039 ,
0016479923973

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



**திருமதி புவனேஸ்வரி சிதம்பரப்பிள்ளை**

(யாழ்ப்பாணம் / மலேசியா)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மலேசியாவை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை புவனேஸ்வரி அவர்கள் (22.07.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் நாகபூரணம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை அவர்களின் மனைவியும், மதிவதனன், மதிவதனி, மணிவண்ணன், மாதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பீதாம்பரம், பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் சிவசந்திரபோஸ், உதயகுமாரி, மனோரஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கீதா, விஜயச்சந்திரன், சுமதி, செல்வம் ஆகியோரின் மாமியாரும், ரேஸ்மா, நிரோசன், மதுமிதா, மதுசன், மதீஸ், மீரா, லக்சிகா, லகீசன், லக்ஸ்மன், தூயவன், தூயகன், அறிவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மதிவதனி - சுவிஸ் - 0041786430237
மதிவதனன்-பிரான்ஸ் - 00330626933752
[illegible]-பிரான்ஸ் - 00330651191154
மாதினி - மலேசியா - 0060195555855

தகவல்:
திருமதி க.மனோரஞ்சிதமலர்
(சகோதரி)

(CR 36697) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரிப்பு!



கொழும்பு. ஜூலை 24
நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று தீவிரமாகி வருகின்றது என்று சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் மீண்டும் கொரோனாத் தொற்றுத் தீவிரமாகி வருகின்றது. கடந்த சில வாரங்களாக ஒரு நாளில் சராசரியாக 10 முதல் 20 வரையிலான தொற்றாளர்களே அவதானிக்கப்பட்ட நிலையில், தற்போது 45 முதல் 70 வரையான தொற்றாளர்கள் அவதானிக்கப்பட்டு வருகின்றனர். எனவே நிலைமை மேலும் தீவிரமாகாமல் செயற்பட வேண்டியது பொதுமக்களின் பொறுப்பாகும். பொதுமக்கள் அத்தியாவசியத் தேவைகளைத் தவிர்ந்த இதர விடயங்களுக்காக ஒன்றுகூடுவதைத் தவிர்க்க வேண்டும் - என்றார். (ம)

## இந்த வருடத்தில்
# இலங்கையில் இதுவரை 43,000 பேருக்கு டெங்கு



கொழும்பு, ஜூலை 24
இலங்கையில் இதுவரை 43 ஆயிரம் பேருக்கு டெங்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜூலை மாதத்தில் மாத்திரம் 8 ஆயிரம் பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆய்வுகளின்படி, அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், கட்டுமானத் தளங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பொது இடங்கள் ஆகியவை டெங்குத் தொற்றுக்கு அதிக வாய்ப்புள்ள இடங்களாக உள்ளன. இவ்வாறான அனைத்து காரணிகளையும் கருத்திற்கொண்டு, டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஜூலை 25 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட டெங்கு ஒழிப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் நிறுவனங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் டெங்கு பரவும் இடங்களை கண்டறிந்து அழிக்கவும், சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கவும், டெங்கு ஒழிப்புக்கு பொறுப்பான அதிகாரியின் கீழ் குழுவை நியமிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம)

# கடன் அட்டைக்கான வட்டி வீதம் உயர்வு
## வர்த்தக வங்கிகள் நடவடிக்கை



கொழும்பு. ஜூலை 24
இலங்கையில் உள்ள பல வர்த்தக வங்கிகள் கடன் அட்டைகளுக்கான வருடாந்த வட்டி வீதத்தை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளன.

கடன் அட்டை மூலமான பரிவர்த்தனைகளுக்கு வசூலிக்கப்படும் வருடாந்திர வட்டி வீதம் 36 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளதாக வர்த்தக வங்கிகள் அறிவித்துள்ளன.

ஏப்ரல் 8ஆம் திகதியன்று இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கடன் அட்டைகளுக்கு விதிக்கப்பட்ட அதிகபட்ச வட்டி வீத வரம்புகளை நீக்க முடிவு செய்தது. அந்த முடிவுக்குப் பிறகு, அதுவரை 18 வீதமாக இருந்த கடன் அட்டை வட்டி 24 வீதமாகவும் பின்னர் 30 வீதமாகவும் அதிகரிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து தற்போது இந்த வட்டிவீதம் 36ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொர்க்கம் திருமண சேவை

1994 பிறந்த பூர நட்சத்திர இத்தாலியில் வசிக்கும் சூரியன் செவ்வாய் உள்ள ஆணுக்கு உள் நாட்டில் பெண் தேவை.

1984 பிறந்த உத்தராட நட்சத்தர லண்டனில் வசிக்கும் (Doctor) பெண்ணிற்கு உள்நாட்டில் (IT, Accounting) படித்த ஆண் தேவை.

1993 பிறந்த பூர நட்சத்திர கனடாவில் வசிக்கும் ஆணுக்கு படித்த அழகான பெண் தேவை.

தொடர்பு கொள்ள:-

**001 416 666 1855, 077 887 6969**

## காணி விற்பனைக்கு

வசாவிளானில் 20 பரப்பு காணி விற்பனைக்கு இரண்டாக பிரித்து கொடுக்கப்படும் தோட்டம், செய்ய வீடு கட்ட, பண்ணை அமைக்க சிறந்த காணி

**077 654 2013 / 077 423 5458**

தெல்லிப்பளை வைத்தியசாலையிலிருந்து 900m

5பரப்பு மொத்த விலை : **4, 500,000/-**

**076 984 7348 / 077 423 5458**

(CS 45647) (3/6)

## கண்ணீர் அஞ்சலி



வலி கிழக்கு
வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச்
சங்கத்தின் கௌரவ
உப தலைவரான
**திரு.இளையதம்பி**
**பஞ்சாட்சரம்**
அவர்களின் அன்பு மனைவி
**அமரர்**
**திருமதி பஞ்சாட்சரம்**
**வனஸ்பதி**

அவர்கள் கடந்த 22.07.2022 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**பணியாளர்களும் பணிப்பாளர்களும்**
**வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்**
**அச்சுவேலி.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 06 . 1959



மறைவு 23 . 07 . 2022

**செல்லத்துரை ஸ்ரீஸ்காந்தராசா (ஸ்ரீ)**

மண்டைதீவு 1ஆம் வட்டாரத்தைப் (கண்ணகை அம்மன் கோவிலடி) பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் மல்லாகத்தை தற்போதைய முகவரியாகவும் கொண்ட செல்லத்துரை ஸ்ரீஸ்காந்தராசா (ஸ்ரீ) நேற்று (23.07.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் கமலாவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும் லதுசயன், ஜனுஜன், துஷ்யந்தன், அனுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீரங்கராணி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் மகாலட்சுமி, பரமானந்தம், நிரஞ்சனா ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் இராசபூபதியின் சிறிய மகனும் கமலாவதி, அமரர் நாகஜீவா, உதயகுமார், நாகநாதன், நாகதேவா ஆகியோரின் மைத்துனரும் மகேந்திரராசா, சுபாசினி, அர்ச்சயதேவி, செல்வதர்சினி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் (மல்லாகம் றெயில்வே கடவை அருகில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 009 4847** (கண்ணன்)
**077 922 3193** (சாந்தினி மல்ரி சென்ரர்)

தகவல்: குடும்பத்தினர்.

### வன்முறையாளர்களைத்தான்...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பமாக முன்னர் அமைச்சர்கள் சிலருடன், காலிமுகத்திடல் போராட்டம் தொடர்பில் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டத்தை நான் ஆதரித்தேன். பிரதமராகப் பதவியேற்க முன்னரும், பிரதமராகப் பதவியேற்ற பின்னரும் அவர்களை ஆதரித்தேன். போராட்டத்தின் செயற்பாட்டாளர்கள் என்னைச் சந்தித்திருந்தனர். அவர்களுக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்திருந்தேன்.

அந்தப் போராட்டத்தின் நோக்கம், ஜனாதிபதி பதவியிலிருந்து கோத்தாபய ராஜபக்சவை வெளியேற்றுவதுதான். அந்த மக்கள் போராட்டம் கடந்த 14ஆம் திகதி மாபெரும் வெற்றியுடன் முடிவுக்கு வந்துவிட்டது.

அதன் பின்னர் அங்கு அரசியல் பின்னணியுடன் கிளர்ச்சிக்கான ஆயத்தங்கள்தான் முன்னெடுக்கப்பட்டன. அவர்கள் வன்முறையை நாடினார்கள். அதனால்தான் அவர்களின் வழியில் பதில் சொல்ல வேண்டி ஏற்பட்டது. இப்போது அவர்களை அமைதிவழியில் போராடுகின்றார்கள் என்றுகூறி, மக்கள் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தக் கூடாது - என்று ரணில் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-22)

### ஜீ.எஸ்.பி...

நாயக உரிமைகளை பாதுகாத்து இலங்கையில் பொருளாதார மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளுக்காக தம்மை தொடர்ந்தும் அர்ப்பணிப்பதாக தெரிவித்துள்ளது. அமைதியாக ஒன்றுகூடுவதற்கும் பேச்சு சுதந்திரத்துக்குமான பொதுமக்களின் உரிமையை உறுதிப்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும், சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சிக் கொள்கைகளைப் பாதுகாப்பதற்கும் நிலையான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த சில வருடங்களில் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் 1 பில்லியன் யூரோ உதவி வழங்கியுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## சுற்றுலா விடுதி பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேசசத்தில் இயங்கும் சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய விடுதி பராமரிப்பாளர் ஒருவர் தேவை. சமையல் செய்யக்கூடியவராகவும், சிங்களமொழி பேசக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். *சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.*

**077 634 9054, 021 221 7408**

## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தட்டச்சு செய்யக்கூடிய கணினி தட்டெழுத்தாளர் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**077 48 77 368**

(CS 200791-6)

## கண்ணீர் அஞ்சலி

நீர்வேலி கனடா நட்புறச் சங்கத்தின் செயலாளர்

**திரு.ஐயாமுத்து சிவராசா**

அவர்கள் 22.07.2022 இறைபதமடைந்தார்.



அன்னை மடியில் 24.01.1950 இறைவன் திருவடியில் 22.07.2022

அன்னாரது மறைவினால்
துயருறும் கும்பத்தவர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு
அவரது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

ஆழ்ந்த துயரத்துடன்
**நீர்வேலி**
**கனடா நட்புறவுச் சங்கம்.**

(cs 45665) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 07 . 1948



மறைவு 24 . 07 . 2021

**அமரர் செல்லையா இளையதம்பி**

திதி: பிரதமை

ஆண்டொன்று மறைந்து
விட்டது அப்பா!
அகலுமா உங்கள்
பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம்
மனதை விட்டு நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வசாவிளான். நினைவுகளுடன் குடும்பத்தினர்

### சிப்பாய்...

வெயாங்கொட வதுரவ ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில், கம்பஹாவைச் சேர்ந்த 52 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஷெர்லி லக்ஸ்மன் திஸாநாயக்க என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கு வந்துகொண்டிருந்த ரயிலில் இருவர் மது அருந்தியுள்ளனர். இதனைக் கண்ணுற்ற ரயில்வே பயணச்சீட்டு பரிசோதகர்கள் இது தொடர்பில், ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர். அவர்கள் அங்கு சென்று சோதனையிட்ட போது, மது போதையில் இருந்த இருவரும் பாதுகாப்பு அதிகாரிகளை திட்டியுள்ளனர்.

மது அருந்திய இருவரையும் அந்த ரயில் பெட்டியில் இருந்து மற்றுமொரு ரயில் பெட்டிக்கு அழைத்துச் செல்ல முற்பட்ட போது, அவர்களில் ஒருவர் அதிகாரியொருவரை எட்டி உதைத்த போதே பாதுகாப்பு அதிகாரி ரயில் கதவில் இருந்து தூக்கி வீசப்பட்டு, உயிரிழந்தார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் அறிந்த மீரிகம பொலிஸ் அதிகாரிகள் குழு, சந்தேக நபர்கள் இருவரையும் மீரிகம ரயில் நிலையத்தில் வைத்து கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்களில் ஒருவரான இராணுவ சிப்பாய் எனவும் அவரே பாதுகாப்பு அதிகாரியை எட்டி உதைத்தவர் என்றும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-இ)

## வீடு வாடகைக்கு

கொடிகாமம் சந்தியிலிருந்து 100 மீற்றரில், கண்டி வீதிக்கு அருகில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.
நேரில் பார்வையிடலாம்.

**077 964 0508**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு கொத்து, றைஸ், றொட்டி போன்றன தயாரிக்கக் கூடிய அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

தொ.பே.இல:- **077 20 30 625**

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதி தாவடி வடக்கில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)

(CS 20054) (3/6)

தொடர்பு :077 255 0807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டங்கள், ஒன்றுகூடல்களை கலைப்பதற்கு விசேட அதிகாரங்கள்

## அவசரகாலச் சட்டம் ஊடாக முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு உள்ளதாம்

கொழும்பு, ஜூலை 24

பொது அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் எந்தவொரு ஒன்றுகூடலையும், ஆர்ப்பாட்டத்தையும் கலைக்க சிறப்பு அதிகாரம், அவசர காலசட்ட விதிமுறைகள் ஊடாக பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் சட்டப் பிரிவின் பிரதானி பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அசங்க கரவிட்ட அறிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 17 ஆம் திகதி பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் கீழான விதிகள் வர்த்தமானி ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளன. அதன்படி பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகளுக்குள் பொலிஸாரும் முப்படையினரும் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் அவர்களது கடமைகளை இடையூறின்றி, தடங்கல்கள் இன்றி முன்னெடுத்துச் செல்ல அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எவரேனும் இடையூறு ஏற்படுத்துவாறாயின் அவருக்கு எதிராக சட்ட மா அதிபரின் ஆலோசனையுடன் மேல் நீதிமன்றில் வழக்குத் தொடுக்க ஏற்பாடுகள் உள்ளன.

அவ்வாறான ஒருவரின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவரது அசையும் அசையா சொத்துக்களை அரச உடைமையாக்கவும் அவசரகால விதிமுறைகள் ஊடாக இயலுமை உள்ளது.

பாதுகாப்பு தரப்பின் நடவடிக்கைகளின் போது உயிர்ச் சேதங்கள் ஏற்படுமாயின் அதனை குற்றவியல் சட்டத்தின் கீழான தற்பாதுகாப்பின் போதான உயிரிழப்பாகக் கருதி செயற்பட ஏற்பாடுகள் உள்ளன. இதனைவிட சமூக வலைத்தள பதிவுகள் தொடர்பில் செயற்படவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளன.

விசாரணை அதிகாரங்களைப் பொறுத்தவரை ஒருவரை கைது செய்து 24 மணி நேரத்தில் மன்றில் முற்படுத்த வேண்டியது சாதாரண சட்ட விதிமுறையாகும். எனினும் அவசரகால சட்டத்தின் கீழ் ஒருவரை 72 மணி நேரம் வரை நீதிமன்றில் முற்படுத்தாமல் விசாரிக்கும் உரிமை பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு உள்ளது. அத்துடன் 3 நாள்களில் விசாரணைகளை முடித்து சந்தேக நபரை முற்படுத்த முடியாவிட்டால், அப்பிரதேசத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு சந்தேக நபர் ஒருவரை மன்றில் முற்படுத்தாது 14 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது, என்றார்.

ஆயினும் காலி முகத்திடல் போராட்டக்காரர்களை கலைக்க அவசர கால சட்ட விதிமுறைகளை பயன்படுத்தவில்லை என தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ, தொடர்ச்சியாக பொது அமைதியை பேண தற்போதைய சட்டங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்த பின் நிற்கப் போவதில்லை என கூறினார். (அ-ஓ-இ)

# ரயில் நிலைய அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக்கை!

ரயில் நிலைய அதிபர்கள் சாதாரண பயணச் சீட்டு விநியோக நடவடிக்கையில் இருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நேற்று மாலை 6 மணிமுதல் 48 மணி நேரம் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளனர்.

ரயில் பயணக் கட்டணங்கள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. எனினும் அவ்வாறு நேற்று முதல் கட்டணத்தை அதிகரிக்க முடியாதென ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் இதற்கு முன்னர் அறிவித்திருந்தது.

அதிகரிக்கப்பட்ட கட்டண திருத்தத்தை நடைமுறைப்படுத்தாத சேவையாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ரயில் திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்திருந்தார். எனினும் குறித்த கட்டணம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுவதாக தொடருந்து நிலைய அதிபர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-ஓ-இ)

# எரிபொருளை விநியோகிக்க ஒத்துழைப்பு வழங்குங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

குழப்பமின்றி எரிபொருளைக் வழங்குவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று முகமாலை எரிபொருள் நிலைய உரிமையாளர் மயில்வாகனம் ஸ்ரீதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட முகமாலை பகுதியில் காணப்படும் எமது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 50 நாள்களுக்குப் பின் மக்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

எமக்குக் கிடைத்த எரிபொருளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமசேவகர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கும் யாழ். மாவட்டத்தில் எழுதுமட்டுவாள், கரம்பம் கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்கும் எரிபொருள் அட்டைக்கு வழங்குவதற்கு அரச அதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பிரதேசங்களில் இருந்து வந்து உங்கள் எரிபொருளையும் நேரத்தையும் வீணாக்காது உங்கள் பிரதேசங்களில் காணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக் கொள்ளுங்கள் - என்றார். (அ-ஓ-26)

### ராஜபக்சக்களை விட

# இப்போதைய ஆட்சியாளர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்!

## மக்களை எச்சரிக்கிறார் சஜித்

கொழும்பு, ஜூலை 24

மக்கள் ஒன்றிணைந்து ஜனநாயகப் போராட்டத்தை முன்னெடுத்து முன்னாள் பிரதமரையும் முன்னாள் ஜனாதிபதியையும் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், அதன் பின்னர் எழுந்த மாற்று அணி முன்னைய நிலையை விட பாரதூரமானது=இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் 225 பேரும் ஒரே மாதிரி என்ற நிலைப்பாடு பொருத்தமல்ல. அது 134 என்பதே சரியானது. மக்கள் சக்திக்கு முன்னால் அரசு தோற்கடிக்கப்படும் என்பது உறுதி. அதன் பிறகு, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொது உடன்பாட்டை உருவாக்க வேண்டும்.

நடந்தது ஒரு ஜனாதிபதித் தேர்தல் அல்ல. இடைக்கால ஜனாதிபதியை நியமிப்பதற்காக நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பே உண்மையில் இடம்பெற்றது. நாட்டில் மக்கள் அபிப்பிராயம் முற்றாகத் திரிபுபடுத்தப்பட்டுள்ள போதிலும், நாடாளுமன்றத்தின் நிலைமை அவ்வாறானதாக இல்லை என்பதை முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. அந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு [illegible] முகம் கொடுக்க [illegible] என்றார். (அ-ஓ-22)

### டீசலை...

என்றால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட நேரிடும் என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பணியாளர்கள், கல்கமுவ சாலை ஊழியர்களால் தாக்கப்பட்டமையைக் கண்டித்து, டீசல் வழங்கலை நேற்று நிறுத்தியிருந்தனர். இதனால் டீசல் பெற்றுக் கொள்வதற்குகாத்திருந்ததனியார்பேருந்து உரிமையாளர்கள் ஏமாற்றமடைந்தனர்.

யாழ். மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெங்காதரன், மாவட்டச் செயலர் க.மகேசனுடன் தொடர்பை ஏற்படுத்தி, 'இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களிடையே ஏற்பட்டுள்ள முரண்பாட்டுக்காக தனியார் சேவையினருக்கு எரிபொருள் வழங்க முடியாது எனக் கூறுவதில் நியாயம் இல்லை. தங்கு தடை இன்றி எரிபொருளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளருடன் கலந்துரையாடி தீர்வைப் பெற்று தரவேண்டும்' எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால் [illegible]வரையில் எரிபொருள் வழங்கப்படாமையால், அவர்கள் தமது பேருந்துகளை கோண்டாவிலிலிருந்து எடுத்துச் சென்றனர். மாவட்டச் செயலருடன் இன்று சந்திப்பை நடத்தி சாதகமான பெறுபேறு எட்டப்படாவிட்டால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாகவும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஓ-26)

### எனது...

கொழும்புச் செய்தியாளர் ஒருவருக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

'ஜனாதிபதித் தெரிவின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானத்தின் பிரகாரம், எத்தனை பேர் என்னை ஆதரிப்பார்கள், எத்தனைபேர் என்னை ஆதரிக்காமல் விட்டார்கள் என்ற விடயம் ஒருபுறம் இருக்கட்டும். அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்து தமிழ்க் கட்சிகளையும், முஸ்லிம் கட்சிகளையும் இணைத்து ஆளும் தரப்புடன் பேச்சு நடத்தி ஒரு தீர்வை எனது பதவிக் காலத்தில் முன்வைத்தே தீருவேன். அதற்கு முன்னதாக பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன். அதுதான் எனது முதல் இலக்கு - என்றார் ரணில். (அ-ஓ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் வழங்குவதற்கு மறுத்த பொலிஸார் மீது டிப்பரால் மோதல்

## சாரதி கைது!

கொழும்பு, ஜூலை 24

பதுளை எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரியுடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து, குறித்த அதிகாரிமீது டிப்பர் வாகனத்தால் ஒருவர் மோதியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

குறித்த எரிபொருள் நிலையத்தில் வாகனத்தின் இறுதி இலக்கத்தின் படி எரிபொருள் விநியோக நடைமுறை செயற்படுத்தப்பட்டிருந்தது.

இதன்போது அங்கு எரிபொருள் பெறவந்த டிப்பர் வாகனத்தின் இறுதி இலக்கத்துக்கு நேற்றுமுன்தினம் எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை. இதனால் டிப்பர் வாகனத்துக்கு எரிபொருள் விநியோகிக்க முடியாது என பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இதனையடுத்து ஆவேசமடைந்த டிப்பர் வாகனச் சாரதி, டிப்பரைக் கொண்டு குறித்த பொலிஸ் அதிகாரியை மோதினார். காயமடைந்த பொலிஸ் அதிகாரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். டிப்பர் சாரதி கைதுசெய்யப்பட்டார். (ம-14.இ)


### சேவை

இத்தாலியன் பொலிஷ் மற்றும் தின்னர் வீட்டுத் தளபாட வேலைகளுக்கு சிறந்தது எம்மிடம் உண்டு. தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

076 821 9414 யாழ்ப்பாணம்

### அறை வாடகைக்கு

பெண் பிள்ளைகளுக்கு மட்டும்
யாழ்.நகரில் அறை வாடகைக்கு உண்டு.

076 47 47 229

### வேலையாள் தேவை

O/L படித்த 25 வயதிற்குட்பட்ட (ஆண்) கடையொன்றில் வேலைக்குத் தேவை.
யாழ்ப்பாணத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

077 445 8582

### சிரட்டைக்கரி அடுப்புகள் விற்பனைக்கு



யாழ்ப்பாணத்தில் சிரட்டைக்கரி அடுப்புக்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 8852 450

### ENGLISH CLASSES

யாழ்நகரில் தனி வகுப்புகள்
Grade 7 - G.C.E. O/L - A/L
Graduates தொழில்புரிவோர் - சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும்
GCE O/L English Literature
K.Ganesh B.A 077 766 8725

### காணி விற்பனைக்கு

யாழ். இந்துக்கல்லூரி அருகில் பிரப்பன் குளம் வீதியில் 2 பரப்பு 2குளி காணி விற்பனைக்குண்டு
(CS 20063) (3/6)

077 229 0303, 070 629 0303

### கடை வாடகைக்குண்டு

K.K.S வீதியில் பன்றிகோட்டு பிள்ளையார் கோவில் அருகில் கடை வாடகைக்குண்டு.
தேவையானவர் தொடர்புகொள்ளவும்

077 545 1358, 077 738 3060

### வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள சிறிய தமிழ் குடும்பம் ஒன்றிற்கு தங்கிருந்து வேலைசெய்ய வீட்டுப்பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
(CS 20049) (2.6)

077 688 8490

### காணி விற்பனைக்கு

யாழ். கச்சேரிக்கு அண்மையாக பேரின்பநாயகம் வீதியில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(CS 45644) (3/6)

தொடர்பு : 076 675 7518

### பொதிகள் சேவை

உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை.
- வெளிநாடு:- 5-9 நாட்கள்
- உள்நாடு:- 24 மணித்தியாலம்

} ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்
077 755 4528
இல.321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

### மின்சாரம் துண்டித்து விட்டதா?
### மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?

இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்
சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும்
J.J GROUP 021 222 8854
(CS 19875)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

### காணி விற்பனைக்கு

யாழ் நாவற்குழியில் 81 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை நான்கு லட்சம் (400000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்

பார்வை இடும் நேரம்
காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029

### பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள மருத்துவர் வீடொன்றில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் அனுபவமுள்ளபெண் தேவை
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(CR 36687) (3/6) 076 104 3037

### வீட்டுப் பணிப்பெண் தேவை

உரும்பிராய் முதலாம் ஒழுங்கையில் உள்ள வீட்டிற்கு சமையல் மற்றும் வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
வயது எல்லை: 30 - 50 விரும்பத்தக்கது
சம்பளம் நாள் ஒன்றுக்கு 1000/=

077 200 4857

### வேலை வாய்ப்பு

எமது GM நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. நாட்டின் அசாதாரண சூழ்நிலையை கருத்திற்கொண்டு மிகக் குறைவான தலைமை அடிப்படையில் இளைஞர், யுவதிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். முன் அனுபவம் ஏதுமின்றி பயிற்சியுடன் கூடிய தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும். நேர்முகத் தேர்வின் போது தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பயிற்சியின் போது நிறுவனத்தினால் கொடுப்பனவுகள் வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் உங்கள் பதவிக்கான ஊதியத்தை பெற்றுக் கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.
077 996 9160, 076 992 9819 (CR 36688) (3/6)

### பதவி வெற்றிடங்கள்

ஆசிரியர்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்
- விவசாய விஞ்ஞானம்

தட்டெழுத்தாளர் (Typist)
- Computer Typist

அனுபவமும் தகுதியுமுடையோர் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

075 699 0691

### HEAD TEACHER

JUNIOR SMART CENTER
INUVIL PUBLIC LIBRARY

We are looking for energetic , self motivated and hard working female teacher to take challenge for enhancing multiple intelligence to our smart kids.



**Candidate profile**
- Relevant academic /professional qualifications (preferable : Diploma in Early Childhood Education/ Pre-school teaching)
- Minimum 3years Experience as Pre – school head teacher/teacher
- Excellent Communication Skills (both Tamil and English) and computer literacy.
- Good interpersonal skills and creative thinking skills
- Age below 45 Years

**Key Duties and responsible**
- Overall monitoring and supervising of Teaching learning process
- Monitor and evaluating students' progress and report learners outcomes parents and management committee
- Supervise curricular and co - curricular activities
- Organize suitable programmers to express students' talents and encourage learners.
- Design and implement of School Improvement Plan.
- Create modern teaching and learning environment.

**Remunerations - negotiable**


Kindly forward your resume on or before 04 August 2022 to inuvillibrarycareer@gmail.com
Contact us: 0770737919
021224 1930 | 021224 4770
Inuvil Public library, Manipay Rd, Inuvil South, Inuvil

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில்

**27 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- யாழ். நகரத்தில் இருந்து 4 KM தூரத்தில் அமைந்துள்ளது.
- 18 அடி பாதையுடன் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் மற்றும் அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.




தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்:
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

ஜெயம்: 077 814 7389
077 241 7589


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

புலிகள் கொஞ்சம் பதுங்கும்போது
நரிகள் போடும் ஆட்டமே
நரிகள் வேஷம் கலையும்போது
புலிகள் வென்று காட்டுமே!
- யாரோ

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஆடி 08 ஞாயிற்றுக்கிழமை (24.07.2022) சிகரம் : 109

# ரணில்: கடைசி ஆளா?




○ நிலாந்தன்

நாடாளுமன்றத்தில் தனது கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே ஒரு உறுப்பினர். அதுவும் தேர்தலில் தோற்றதால், தேசியப் பட்டியல்மூலம் உள்ளே வந்தவர். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இது ஆசியாவின் அதிசயம் மட்டுமல்ல உலகத்தின் அதிசயமும்தான். தாமரை மொட்டுக்குத் தலைமை தாங்கும் யானைக்கும், யானைக்குத் தலைமை தாங்கும் தாமரை மொட்டுக்கும் இடையிலான போட்டியில் யானை ஜெயித்திருக்கிறது. எனவே அது எல்லா விதத்திலும் தாமரை மொட்டுக்குக் கிடைத்த வெற்றிதான். ரகசிய வாக்கெடுப்பு என்பது திருடர்களுக்கு வசதியானது. "அரகலய" போராட்டக்காரர்கள் கூறுவதுபோல, திருடர்களே வெற்றியைத் தீர்மானித்திருக்கிறார்கள்.

ரணிலை முன்னிறுத்தியதன் மூலம் ராஜபக்சக்கள் தங்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பாதுகாத்துக் கொண்டு விட்டார்கள். இது முதலாவது வெற்றி. இரண்டாவது வெற்றி, போராட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்யலாம் என்பது. பதவியேற்ற அடுத்தநாளே ரணில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதலைத் தொடுத்திருக்கிறார். எனினும் இது ஒரு முழுமையான முறியடிப்பு நடவடிக்கை அல்ல. ஒருவிதத்தில் குறியீட்டு வகைப்பட்ட எச்சரிக்கை எனலாம். ஜனாதிபதி செயலகத்தின் முன்பகுதியைக் கைப்பற்றி வைத்திருந்த ஆர்ப்பாட்டக்காரர்களே அகற்றப்பட்டிருக்கிறார்கள். அதேசமயம் கோத்தா கோகம கிராமத்தைச் சேந்த கூடாரங்கள் பெருமளவுக்கு அகற்றப்படவில்லை.

ஜனாதிபதி செயலகத்தை சில தினங்களில் கையளிக்கப்போவதாக போராட்டத்தில் ஈடுபடும் தரப்புகள் சமூக வலைத்தளங்களில் அறிவித்திருந்தன என்றும், நள்ளிரவுத் தாக்குதலை அவர்கள் எதிர்பார்க்கவில்லை என்றும் தெரிகிறது.

இது கிட்டத்தட்ட ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் இறுதிக்கட்டத்தை ஒத்தது. தமிழகத்தில் நடந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தில் தமது பிரதான கோரிக்கைகள் வென்றெடுக்கப்பட்டபின் அந்த வெற்றியின் உற்சாகத்தால் புதிய கோரிக்கைகளை முன்வைத்து ஒரு தரப்பு தொடர்ந்து போராட்டக் களத்தில் நின்றது. மிஞ்சி நின்ற அந்தத் தரப்பை தமிழக அரசு பலத்தை பிரயோகித்து துரத்தியது.

எனினும் காலிமுகத்திடல் போராட்டம் சற்று வித்தியாசமானது. போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் முழுமையாக வெற்றி பெறவில்லை. ரணிலை முன்னிறுத்தி ராஜபக்சக்கள் தப்பிவிட்டார்கள். அதுமட்டுமல்ல போராட்டத்தின் இறுதி வெற்றியைத் தடுக்கும் ஒருவராக ரணில் ஜனாதிபதியாக மேலெழுந்து விட்டார். ராஜபக்சக்களை பிரதியீடு செய்யும் ரணிலை அகற்றுவதற்காக தொடர்ந்து போராடப் போவதாக போராட்டக்காரர்கள் கூறுகிறார்கள்.

ஏற்கனவே தன்னுடைய வீடு எரிக்கப்பட்டதாலும், தனக்கு மிகவும் விருப்பத்துக்குரிய வளர்ப்பு நாய் கொல்லப்பட்டதாலும், ரணில் தனிப்பட்ட முறையில் மனமுடைந்து காணப்பட்டார். நள்ளிரவுத் தாக்குதலை ஊக்குவித்த காரணிகளில் அதுவும் ஒன்றா? போராட்டங்களின் பின்னணிகளில் மேற்கு நாடுகள் நின்றன. சில விமர்சகர்கள் கூறுவது போல மேற்கத்தைய தூதுவர்கள் போராட்டத்துக்கு நிதியுதவி வழங்கினார்கள் என்ற சூழ்ச்சிக் கோட்பாட்டை இந்தக்கட்டுரை நியாயப்படுத்தவில்லை. ஆனால் போராட்டங்களுக்கு மேற்கத்தைய தூதரகங்களின் ஆசீர்வாதம் இருந்தது. இப்பொழுதும் ரணில் விக்கிரமசிங்கவின் முறியடிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக மேற்கு நாடுகள், கொழும்பில் உள்ள ஐ.நா. தூதரகம் போன்றன கருத்துத் தெரிவித்துள்ளன. ஆனால் முன்பு ராஜபக்சவுக்கு எதிராக பயன்படுத்திய கடுமையான வார்த்தைகளை இம்முறை பயன்படுத்தவில்லை. இதுதான் அரசியல். சீனாவுக்கு விசுவாசமான ராஜபக்சக்களை ஆட்சியில் இருந்து அகற்றும்வரை போராட்டக்காரர்களைத் தடவித்தடவி உற்சாகமூட்டினார்கள். ராஜபக்சக்கள் அகற்றப்பட்டதன் விளைவாக மேற்குக்கு விசுவாசமான ரணில் ஜனாதிபதியாகிவிட்டார். இப்பொழுது எந்தப் போராட்டங்களை மேற்கு ஆசீர்வதித்ததோ, அதே போராட்டங்களை அவர்களுடைய விசுவாசியை வைத்துக் கையாள வேண்டிய ஒரு நிலை.

போராட்டங்களின் இதயமாகக் காணப்பட்ட இடதுசாரி மரபில் வந்த ஜேவிபி, முன்னிலை சோசலிசக் கட்சி, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் போன்றவற்றை மேற்குநாடுகள் குறிப்பாக இந்தியா போன்றன எச்சரிக்கை உணர்வோடுதான் அணுகின. இடதுசாரிப் பாரம்பரியத்தில் வந்த தரப்புகள் இலங்கைத்தீவின் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதையோ அல்லது தீர்மானிக்கும் சக்திகளாக வருவதையோ மேற்குநாடுகளும் அனுமதிக்காது. இந்தியாவும் அனுமதிக்காது. எனவே ரணிலுக்கு எதிரான 'அரகலயவை' ஏதோ ஒரு விதத்தில் முறியடிக்க வேண்டிய தேவை மேற்குக்கும் உண்டு.

'அரகலயவை' நீர்த்துப்போகச் செய்வதும் பொருளாதார நெருக்கடிகளை தற்காலிகமாகத் தணிப்பதும் ஒன்றுதான். ஏனென்றால் பொருளாதார நெருக்கடிகளின் காரணமாகத்தான் 'அரகலய' தோற்றம் பெற்றது. எனவே பொருளாதார நெருக்கடிகளை தற்காலிகமாகவேனும் வெற்றிகரமாகக் கையாண்டால், நடுத்தர வர்க்கத்தின் கொதிப்பையும் கோபத்தையும் தணிக்கலாம். ரணில் பதில் ஜனாதிபதியாக வந்த கையோடு அந்த மாற்றத்தைக் காட்ட விளைந்தார். எரிவாயு கிடைக்க தொடங்கியது, எரிபொருள் வரத் தொடங்கியது, மின்வெட்டு நேரம் குறைக்கப்பட்டது.

ரணில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் ஐ.எம்.எஃப் வெளியிட்ட அறிக்கையும் மத்தியவங்கி ஆளுநர் தெரிவித்த கருத்துக்களும் அந்த வகையிலானவைதான். மத்தியவங்கியின் ஆளுநர் இப்பொழுது கூறுகிறார் 5 மாதங்களுக்குள் நிலைமை தேறிவிடும் என்று. ஆனால் சில கிழமைமைகளுக்கு முன் ரணில் கூறினார், பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு குறைந்தது நான்கு ஆண்டுகள் தேவை என்று ஐ.எம்.எஃப் கூறியதாக. அதிலும் குறிப்பாக முதலாவது ஆண்டு மிக நெருக்கடியான ஆண்டாக அமையும் என்றும் அவர் எச்சரித்திருந்தார். ஆனால் இப்பொழுது மத்திய வங்கியின் ஆளுநர் கூறுகிறார் நாலைந்து மாதங்களில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் என்று. மொத்தத்தில் ரணிலைப் பலப்படுத்துவதற்காக மேற்குநாடுகளும் ஐ.எம்.எஃப்பும் இலங்கைத்தீவை நோக்கி உதவிகளைப் பாய்ச்சத் தொடங்கிவிட்டன. பங்குச் சந்தையும் அண்மை நாட்களில் மாற்றத்தைக் காட்டுகிறது. ரணிலை பலப்படுத்துவதுதான் அவர்களுடைய ஒரே குறிக்கோள். ரணிலை பலப்படுத்துவதென்றால் பொருளாதாரத்தை தற்காலிகமாகவேனும் நிமிர்த்த வேண்டும். பொருளாதாரத்தை தற்காலிகமாக நிமிர்த்திவிட்டால் போராட்டத்துக்கான காரணங்கள் வலுவிழந்துவிடும்.



எனினும், போராடும் தரப்புக்களுக்கு அதிர்ச்சி கொடுக்க வேண்டும் என்று ரணில் சிந்திப்பதாகத் தெரிகிறது. இத்தாலிய அறிஞரான க்ரொம்சி கூறுவது போல...நாடாளுமன்றம், ஜனநாயகம் என்றெல்லாம் வெளித் தோற்றத்துக்குக் காட்டப்படும். ஆனால் அரசுக்கு ஆபத்து என்று வரும்போது நாடாளுமன்றத்தின் பின் மறைந்து நிற்கும் டாங்கிகள் வெளியில் வரும். அதுதான் கடந்த வியாழன் நள்ளிரவு நடந்ததா? பதில் ஜனாதி

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.நிக்ஸன்

# நல்லிணக்கவாதியா ரணில்?



ஒற்றையாட்சியைப் பாதுகாக்கும் இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் எவர், ஜனாதிபதியாகப் பதவியேற்றாலும், வடக்கு - கிழக்குத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியாது.

இலங்கை அரசியல் யாப்பைப் பாதுகாப்பேன் என்று கூறியே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துள்ளார். அரசியல் யாப்பைப் பாதுகாப்பது என்பது பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் ஒற்றையாட்சி முறையைக் குறிக்கும். பதவிப் பிரமாணம் முடிந்த கையோடு, பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்று, முப்படைத் தளபதிகளையும் ரணில் சந்திக்கிறார் ,பௌத்த விகாரைக்குச் செல்கிறார். இவைதான் ஒற்றையாட்சி அரசியல் யாப்பைப் பாதுகாக்கும் ஜனாதிபதியின் முதற் கடமை என்பதை ரணில் தனது செயற்பாட்டின் மூலம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். ஏனைய சமயத்தலைவர்கள் எவரையும் அவர் சந்திக்கவில்லை. புதன்கிழமை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதும், நாடாளுமன்றத்தில் இருந்து நேரடியாகக் களனி கங்காரம விகாரைக்குச் சென்றிருந்தார் ரணில்.

கோத்தாபய ராஜபக்சவைப் பதவியில் இருந்து வெளியேறுமாறு கோரி ஜூலை ஒன்பதாம் திகதி நடத்தப்பட்ட போராட்டத்தைப் பௌத்த தேசிய எழுச்சியாக மடைமாற்றிய ஓமல்பே சோபித தேரர், கொழும்பில் பன்னிரண்டாம் திகதி நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ராஜபக்ச குடும்பம் பௌத்ததேசிய சக்தியை இழந்துவிட்டதால் துரத்தப்பட்டதாக பெருமையோடு புகழ்பாடியிருந்தார்.

ஆனால் ஓமல்பே சோபித தேரர் கூறிய இந்தக் கருத்துக்குக் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் இதுவரையும் மறுப்பு வெளியிடவில்லை. போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த ஏனைய சிங்களப் பொது அமைப்புகளோ, சிங்கள அரசியல் தலைவர்களோ, எவருமே ஓமல்பே சோபித தேரர் கூறிய அந்தக் கருத்தைக் கண்டிக்கவில்லை.

இந்த நிலையில், ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ரணில், ஈழத்தமிழ் மக்களின் விவகாரத்தை எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதற்கு அவருடைய கடந்த காலச் செயற்பாடுகள் முன்னுதாரணமாகின்றன. அந்தச் செயற்பாடுகள் எவையுமே ரகசியமானவையுமல்ல.

2000 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சமர்ப்பித்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நகல் யோசனையை, நாடாளுமன்றத்தில் கிழித்தெறிந்து தீயிட்டவர் ரணில். இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு, சந்திரிகாவின் இந்த நகல் யோசனை ஆபத்தானது என்று பகிரங்கமாகக் கூறியே ரணில் அதற்குத் தீயிட்டிருந்தார். ஆனால் சந்திரிகா சமர்ப்பித்த அந்த நகல் யோசனைகூட, இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கு அமைவானதாகவே இருந்தது. அப்போது தமிழ்த் தலைவர்கள் பலரும் எதிர்ப்பு வெளியிட்டிருந்த நிலையிலும்கூட, இலங்கையின் இறைமைக்கு ஆபத்து என்று விபரித்த ரணில் விக்கிரமசிங்க, அந்த நகல் யோசனையை இலங்கை நாடாளுமன்றத்தில் தீயிட்டிருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேதான் 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய தேசிய முன்னணியாக ஏனைய சிறிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்திருந்தது.

பிரதமராக ரணில் பதவிஏற்றார்.

அப்போது ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தார். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், நோர்வேயின் ஏற்பாட்டில், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ரணில் ஆரம்பித்திருந்தார். வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் பேச்சுவார்த்தைக் குழு ஒன்றையும் ரணில் அமைத்திருந்தார்.

பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட இணக்கங்களை நடைமுறைப்படுத்த ரணில் தலைமையிலான அரசாங்கம் அப்போது தயங்கியது. சந்திரிகா தன்னைத் தடுப்பதாகக் குற்றம் சுமத்தி, தனக்குரிய பொறுப்புக்களை ரணில் தவிர்த்துக் கொண்டார்.

வடக்கு - கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட போர் நிறுத்த மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஏற்க மறுத்ததோடு, புலிகள் மீதும் ரணில் குற்றம் சுமத்தியிருந்தார்.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தைச் சர்வதேச வலைப்பின்னல்களில் சிக்கவைக்கும் பல முயற்சிகளை மேற்கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க என்பது அன்று பொதுவாக எல்லோருக்கும் தெரிந்திருந்தகதை. 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து அமைத்த நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராகப் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச விசாரணையை உள்ளக விசாரணையாக மாற்றும் யோசனையைக் கன கச்சிதமாகக் கையாண்டிருந்தார்.

அப்போது வெளியுறவு அமைச்சராக இருந்த மங்கள சமரவீரகூட சர்வதேச விசாரணைக்கு இணங்கியபோதும், அதனை உள்ளக விசாரணையாக மாற்ற ஆலோசனை வழங்கியவர் ரணில் விக்கிரமசிங்கவே.

இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பையும், அதன் சட்ட ஏற்பாடுகளையும், அதன் ஊடான இலங்கையின் இறைமை தன் ஆதிக்கம் போன்றவற்றைப் பாதுகாப்பதே தனது நோக்கம் என்று, 2015 ஆம் ஆண்டு ஜனவரி ஒன்பதாம் திகதி பிரதமராகப் பதவியேற்றபோது கூறியிருந்த ரணில் விக்கிரமசிங்க, 2017 ஆம் ஆண்டு முன்வைத்திருந்த தீர்வுத் திட்டத்தில்கூட இலங்கை ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டே வடக்கு= கிழக்குத் தமிழர் தாயகப் பிரச்சினைகளை அணுகியிருந்தார்.

2009 க்கு முன்னரும் 2009 க்குப் பின்னரும் வடக்கு -கிழக்குத் தாயகப் பகுதிகளில் இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வந்த காணி அபகரிப்பு நடவடிக்கைகளை, 2015 ஆம் ஆண்டு முதல் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பை மையப்படுத்திய காணி அபிவிருத்தித் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வன இலாகத் திணைக்களம் போன்ற

## தமிழ்த்தேசியக் கட்சிகள் செய்ய வேண்டியது என்ன?




அரச திணைக்களங்கள் மூலமாகவும், இலங்கை ஒற்றையாட்சி அரச சட்டத்துக்கு ஏற்பவும் மாற்றியமைத்திருந்தார்.

இலங்கை இனப்பிரச்சினை என்ற சொல்லாடலை, சர்வதேசத்தின் மூலம் இலங்கையில் நல்லிணக்கம் (Reconciliation) என்ற சொற்பிரயோகமாகவும் மாற்றியமைத்தவர் ரணிலே.

அது மாத்திரமல்ல, போர்க்குற்ற விசாரணை மற்றும் இன அழிப்புக் கோரிக்கைகள் போன்றவற்றையும், இலங்கை மக்களின் ஒட்டுமொத்த மனித உரிமைப் பிரச்சினையாகவும், வடக்கு-கிழக்குப் பிரச்சினை என்பதைத் தனியே வடக்குப் பிரச்சினையாகவும் மாற்றியவர்தான் இந்த ரணில் விக்கிரமசிங்க.

கிழக்கு மாகாணத்தைத் தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் வாழும் சமாதானப் பிரதேசமாகவும் ரணில் விக்கிரமசிங்க காண்பிக்க முற்பட்டிருந்தார்.

அதற்காக வடக்கு- கிழக்குத் தமிழ் மக்களின் அதிகளவு வாக்குகளைப் பெற்று இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் 15 ஆசனங்களுடன் இருந்த சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் தன் வசப்படுத்தியிருந்தார் இந்த ரணில் விக்கிரமசிங்க.

அதாவது மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகவும், கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராவும் இருந்து கொண்டு 2009 இல் போரை இல்லாதொழித்தார்கள். 2009 க்குப் பின்னரான சூழலில் சர்வதேச அரங்கில் கொதி நிலையாக நீட்சியடைந்திருந்த ஈழத்தமிழர்கள் விவகாரத்தை, ரணில் விக்கிரமசிங்க 2015 இல் பிரதமராகப் பதவி வகித்தபோது இலங்கைத்தீவின் உள்ளக விவகாரமாக மாற்றியிருந்தார்.

இந்தப் பின்புலத்திலேதான் கோத்தாபய ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலக முன்னர் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கியிருந்தார் என்பது வெளிச்சமாகிறது. கோத்தாபயவின் வெளியேற்றத்தின் பின்னர், ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்றமைகூட இந்தப் பின்னணியிலேதான் என்பதும் கண்கூடு.

ஆகவே மிதவாதியாகக் காண்பித்துக் கொண்டு பௌத்த தேசியத்தையும் இலங்கையின் ஒற்றையாட்சி அரச கட்டமைப்பையும் பாதுகாப்பதற்குரிய மூளையாக இயங்கிக் கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவை, 2022 ஜூலை ஒன்பதாம் திகதிக்குப் பின்னரான சூழலிலேயே சிங்கள மக்களில் அநேகமானோர் புரிந்து கொள்ள ஆரம்பித்திருப்பர்.

ஆனால் புலம்பெயர் தேசத்திலும், புலத்திலும் உள்ள சில தமிழ்த்தரப்பினர், ரணில் விக்கிரமசிங்கவை மிதவாதியாகவும், அவருடன் பேரம் பேசி எதனையும் சாதிக்கலாமென்றும் தவறான கற்பிதங்களைச் செய்ய விளைகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியாக ரணில் பதவிப் பிரமாணம் செய்தபோது, வடக்கு- கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் சில தமிழ் இளைஞர்கள் வெடிகொளுத்தி ஆரவாரம் செய்தமைக்குப் பின்னால், தவறான கற்பிதங்களை மேற்கொள்ளும் சிலர் இருந்துள்ளனர் என்பதும் வெளிச்சம்.

2002/2015 ஆம் ஆண்டுகளில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது தமிழர் தரப்பையும், தமிழ் - முஸ்லிம் மக்களையும் பிரித்தாளக் கையாண்ட தந்திரம், இன்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற நிலையில் அது வேறு வடிவங்களாக மாறக்கூடிய ஆபத்துக்களே விஞ்சியுள்ளன. இதனைத் தந்திரோபாயமாகக் கையாளக்கூடிய இராஜதந்திரம் தமிழ்த் தரப்புக்கு அவசியமாகிறது.

அத்துடன் எழுபது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அரசியல் போராட்டம் பற்றிய நியாயப்பாடுகளைச் சர்வதேசத்தை நோக்கித் திருப்ப வேண்டிய பொறுப்பும் தமிழ்த்தேசிய சக்திகளுக்கு மேலும் அதிகரித்துள்ளன. தேர்தலில் போட்டியிடத் தனித் தனிக் கட்சிகளாக இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள், இந்த விடயத்தில் ஒருமித்த குரலில் செயற்பட வேண்டிய காலகட்டம் இது என்பதை, ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னரான அரசியல் சூழல் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறது.

பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுப் பிரச்சினைகள் அதன் மூலமான மக்கள் கொந்தளிப்புகளுக்கு மத்தியில், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால், இலங்கைத்தேசியத்தைப் பாதுகாக்கும் நோக்கில் எப்படி சிங்கள அரசியல் தலைவர்கள் ஒருமித்த குரலில் ஒன்றிணைந்தார்களோ, அதேபோன்று கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒருமித்த குரலில் தமிழ்த்தேசியத்தைப் பாதுக்க வேண்டிய தருணம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சியங்களின் ராஜா



○ ந.பரமேஸ்வரன்

**1325** ஆம் ஆண்டுடில்லியை ஆட்சி செய்த 'துக்ளக்' என்ற அரசனின் பெயரால் மறைந்த நகைச்சுவை நடிகரும், தயாரிப்பாளரும், பத்திரிகையாளருமான சோ 1968 ஆம் ஆண்டு 'முகமது பின் துக்ளக்' என்ற பெயரில் ஒரு அங்கத நகைச்சுவை நாடகத்தை அரங்கேற்றினார்.

இந்த நாடகம் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப்பெற்றது. பின்னர் 1971 ஆம் ஆண்டு திரைப்படமாகவும் வெளிவந்தது. சுருக்கமாக சொல்வதானால் 23 ஆம் புலிகேசி போன்ற ஒரு திரைப்படம் என்று சொல்லலாம்.

ஜனநாயகம் என்ற பெயரில் இடம்பெறும் கேலிக் கூத்துகளை விமர்சிப்பதாக இந்த நாடகம் அல்லது திரைப்படம் அமைந்திருந்தது. இந்தத் திரைப் படத்துக்கு தடை விதித்த இந்திய அரசாங்கம் பின்னர் தடையை நீக்கியிருந்தது.

இந்தத் திரைப்படம் பற்றி அல்லது நாடகம் பற்றி மிகவும் சுருக்கமாகப் பார்ப்போம். இந்தியாவில் ரங்காச்சாரி என்ற சரித்திரப்பேராசிரியர் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் 1325 ஆம் ஆண்டு டெல்லியை ஆட்சி செய்த துக்ளக் என்ற சுல்தானின் உடலை கண்டு பிடிக்கிறார். சுல்தான் துக்ளக்கின் சடலம் இருந்த பெட்டியை திறந்து பார்க்க அரசர் துக்ளக் உயிருடன் காணப்படுகிறார். துக்ளக் காலமாகி 600 வருடங்கள் கழிந்து விட்டன என்று துக்ளக்குக்கு சரித்திரப்பேராசிரியர் ரங்காச்சாரி எடுத்துச்சொல்ல, அதற்கு துக்ளக் 'இப்போது யார் சுல்தான்?' என ரங்காச்சாரியிடம் கேட்பார். 'இப்போது சுல்தான் என்று ஒருவருமில்லை. சுல்தானாக வருவதாயிருந்தால் தேர்தலில் போட்டியிட வேண்டும். தேர்தலில் வென்றால் சுல்தானாக வரலாம்' என பேராசிரியர் கூறுவார்.

மக்களின் அழுத்தம் காரணமாக துக்ளக் இடைத் தேர்தல் ஒன்றில் போட்டியிடுகிறார். தேர்தலில் வெற்றி பெற்றதும் துக்ளக் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து கலந்துரையாடலில் ஈடுபடுவார்.

தனது கட்சியில் இணைந்து கொள்பவர்களுக்கு மந்திரிப்பதவி வழங்கப்படும் என துக்ளக் கூறுவார். உடனே நாடாளுமன்ற உறுப்பினர்கள் 332 பேர் துக்ளக்கின் கட்சியில் இணைந்து விடுவார்கள். தனது கட்சியில் இணைந்து கொண்ட அனைவருக்கும் உதவிப்பிரதமர் பதவி வழங்கப்படும் என துக்ளக் அறிவிப்பார். அனைத்து அமைச்சுகளும் பிரதமரிடமே இருக்கும் ஏனையோர் இலாகா இல்லாத மந்திரிகள். துக்ளக் பிரதமர் ஏனையோர் உதவிப்பிரதமர்கள்.

இப்படியாக இந்தியாவில் பிரதமர் துக்ளக்கின் ஆட்சி தொடரும்.

இந்திய ஜனநாயகத்தை கேலி செய்யும் வகையில் சோ தயாரித்த படக்காட்சிகள், சிறிலங்காவில் நிஜமாகவே இப்போது நடைபெற்றுள்ளன. இலங்கையின் முன்னணி தலைவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பழம்பெரும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியால் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஒரு ஆசனத்தைக்கூட கைப்பற்ற முடியவில்லை. 1956,1970 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில், ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியைச் சந்தித்திருந்த போதும் 2020 ஆம் ஆண்டு போன்ற வரலாற்றுத்தோல்வியை ஒரு போதும் சந்திக்கவில்லை.

இந்த நிலையில் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்தினுள் பிரவேசித்த ரணில் இப்போது நாட்டின் நிறைவேற்று அதிகாரம் மிக்க தலைவராக (ஜனாதிபதியாக) பதவிப்பிரமாணம் செய்துள்ளார். சிறிலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்புக்கு உட்பட்டே (சட்டபூர்வமான முறையிலேயே) ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார். இதுவரை காலமும் இலங்கையை ஆட்சி செய்த தலைவர்களான டி.எஸ். சேனநாயக்க, பண்டாரநாயக்க, ஜே.ஆர்.சிறிமா, பிரேமதாஸ, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா, மஹிந்த, கோத்தா அனைவரும் மக்களின் ஆணையுடனே ஆட்சியை கைப்பற்றி ஆட்சி செய்தனர். இந்த வகையில் மக்களின் ஆணையைப்பெறாத அல்லது மக்களால் நிராகரிக்கப்பட்டும், அரியணை ஏறிய முதலாவது தலைவராக ரணில் விளங்குகிறார்.

*தயான் ஜெயதிலக இது பற்றி பின்வருமாறு கூறுகிறார்.*

'பூச்சிய வீத மக்களின் ஆணை பெற்ற தலைவராக (0% mandate) ரணில் விளங்குகிறார்'

ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்றமை சட்டபூர்வமானதே என்பதையும் தயான் ஜெயதிலக வலியுறுத்தியுள்ளார்.

'மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி (People elected President) என்றே இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு அரசியல் யாப்பு கூறுகிறது. இதுவா மக்களின் அரசியல் யாப்பு? (People's Constitution)' என பத்மனி மெண்டிஸ் என்பவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரிட்டனுக்கு அடுத்ததாக (உலகில் இரண்டாவதாக) சர்வசன வாக்குரிமையை பெற்றுக்கொண்ட நாடு என்ற பெருமைக்குரிய பழம் பெரும் ஜனநாயக நாட்டில் ஜனநாயகம் என்ற பெயரில் நடைபெறும் பித்தலாட்டங்களுக்கு அளவு கணக்கில்லை. 1977 ஆம் ஆண்டு வெஸ்ட்மினிஸ்டர் முறை ஒழிக்கப்பட்டு நிறைவேற்று அதிகார ஆட்சி முறை இலங்கையில் அமுலுக்கு வந்த பின்னர் பதவி வகித்த ஜனாதிபதிகள் அனைவரும் சர்வாதிகாரப் போக்கிலேயே நடந்து கொண்டனர் எனவும், இதுவரை 20 திருத்தங்கள் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுரேன் சுமித்திராய்ச்சி என்பவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஆனால் வெஸ்ட்மினிஸ்டர் நாடாளுமன்ற முறை ஆட்சியின் கீழேயே தமிழர்களுக்கு எதிரான 29 ஆவது ஷரத்து நீக்கம், தனிச்சிங்களச் சட்டம் போன்ற சட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை பற்றி சிங்கள அரசியல் ஆய்வாளர் எதுவும் கூறவில்லை.

இப்போது இலங்கை அரசியல் யாப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும்; புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து தென்னிலங்கையில் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகிறது. தமிழ்த் தேசியவாதிகள் இந்த அரிய சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சிங்களப் புத்திஜீவிகளுடன் இணைந்து ஒரு பன்முகத் தன்மை கொண்ட புதிய அரசியல் யாப்பை தயாரிக்கும் பணிகளில் இப்போதே தமிழ்த் தரப்புகள் ஈடுபட வேண்டும்; அரசியல்வாதிகள் மட்டுமன்றி தமிழ்ப் புத்திஜீவிகளும் இந்தப் பணியில் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும்; உடனடியாக களத்தில் இறங்குங்கள். ஒரு அரசியல் மாற்றத்துக்கு, புதிய அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்பட் வேண்டும் என்பதில் சிங்கள புத்திஜீவிகள் தெளிவாக உள்ளனர். சர்வதேச மட்டத்திலும் ஒரு சாதகமான சூழல் நிலவுகிறது. எனவே இப்பொழுதே சிங்களப்புத்திஜீவிகளுடன் இணைந்து பன்முகத்தன்மையுடைய ஒரு புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் பணியில் [illegible] அரசி[illegible] பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

**1909 நவம்பர்**
பளையில் தென்னந்தும்பு ஆலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

**1910 ஜீலை**
பிரதம நீதியரசர் ஜோசப் ஹச்சின்சன் (Joseph Hutchinson) மானிப்பாய் இந்தக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார். ஊர்காவற்றுறை நீதிபதியாகக் கடமையாற்றிய வைமன் கதிரவேற்பிள்ளை ஓய்வுபெற்ற பின் தமிழ் அகராதி ஒன்றைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். எனினும் இந்த அகராதியைப் பூர்த்தியாக்காமலே காலமாகி விட்டார். வைமன் கதிரவேற்பிள்ளை தொகுத்த 'அ' எனத் தொடங்கும் முதலாவது தொகுதியை மதுரை தமிழ்ச்சங்க பண்டிதர் பாண்டித்துரைத்தேவர் வெளியிட்டார்.

**1910 ஒகஸ்ட்**
அரச சட்டத்தரணி வி.காசிப்பிள்ளை யாழ்ப்பாண பொலிஸ் நீதவனாக நியமிக்கப்பட்டார்.

**1910 ஒகஸ்ட் 16**
ஆளுநர் சேர்.ஹென்றி மக்கலம் (Henry Mclam) இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்தார். ஆளுநருக்கு நகைப்பெட்டி ஒன்று நாவலர் கோட்டம் முத்துத்தம்பிப்பிள்ளையால் பரிசளிக்கப்பட்டது. நகைப்பெட்டியின் நடுவே தாமரைப்பூவின் மீது பூரண கும்பம் வடிவமைக்கப்பட்டு நான்கு மூலைகளிலும் புகையிலை வடிவமைக்கப்பட்டிருந்தது. சிறிது காலத்துக்கு முன்னர் புகையிலை வரியை அரசாங்கம் குறைத்திருந்தமையால் யாழ்ப்பாணத்தின் அடையாளமாக புகையிலை நான்கு மூலைகளிலும் வடிவமைக்கப்பட்டி ருந்தது. வண்ணார் பண்ணையைச்சேர்ந்த சுப்பையா பத்தர் இந்த நகைப்பெட்டியை வடிவமைத்திருந்தார்.

**1910 ஒகஸ்ட் 17**
யாழ்ப்பாணக்கிராமத்தலைவர்களுடன் ஆளுநர் கலந்துரையாடலில் ஈடுபட்டார். கோயில் தர்மசாதனங்கள், மடங்கள், கால்நடை வளர்ப்பு, புகையிலை உற்பத்தி, வன்னிக்குடியேற்றம், மலேரியாத் தாக்கம், பரீட்சார்த்த விவசாயத் தோட்டங்கள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

**1910 செப்ரெம்பர்**
சட்டசபைக்கு இலங்கைப்பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்வதறகான சட்டமூலம் வெளியிடப்பட்டது. அதுவரை இனரீதியான பிரதிநிதிகளே (தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கி, ஐரோப்பிய பிரதிநிதிகளே) சட்டசபையில் அங்கம் வகித்தனர். முதல் தடவையாக முழு இலங்கைக்குமாக ஒரு பிரதிநிதியை தெரிவு செய்வதற்கான சட்டமூலம் வெளியிடப்பட்டது.

**1910 செப்ரெம்பர் 13**
கோப்பாயில் சேர் பொன். இராமநாதன், பெண்களுக்கான சைவ பாடசாலையொன்றை ஆரம்பித்தார்.

**1910 செப்ரெம்பர் 16**
கல்வியறிவுள்ள இலங்கையர் ஒருவரை சட்டசபைக்கு பிரதிநிதி யாக (educated Ceylonese member) தெரிவு செய்வதற்கான பிரசாரம் ஆரம்பமானது. இந்தத் தேர்தலில் பல சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெற்றன. இந்தத் தேர்தலில் போட்டியிடுமாறு இராமநாதனை வலியுறுத்தி மொல்லிகொட, டொனால்ட் ஒபயசேகர ஆகியோர் உள்ளிட்ட 20 சிங்களத்தலைவர்கள் இணைந்து இராமநாதனுக்கு கடிதம் எழுதினர்: இராமநாதன் அப்போது இந்தியாவிலிருந்தார். மார்க்கஸ் பெர்னாண்டோ என்ற சிங்கள மருத்துவர் இராமநாதனை எதிர்த்து போட்டியிட்டார்; இவர் அப்போது இருந்த பிரிட்டிஷ் ஆளுநரின் குடும்ப மருத்துவர். இந்தத் தேர்தலில் சிங்கள பௌத்தர்களும், இந்து தமிழர்களும் இராமநாதனை ஆதரித்தனர். கிறிஸ்தவர்கள் மார்க்கஸ் பெர்னாண்டோவை ஆதரித்தனர். மானிப்பாயைச்சேர்ந்த உவில்லியம் மேதர், மார்க்கஸ் பெர்னாண்டோவின் நியமனப்பத்திரத்தை வழிமொழிந்தார். இராமநாதனின் நியமனப் பத்திரத்தை ஒரு சிங்களவர் வழிமொழிந்தார். உதயதாரகை, கத்தோலிக்கப் பாதுகாவலன் பத்திரிகைகள் மார்க்கஸ் பெர்னாண்டோவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய இந்துசாதனம் மற்றும் சிங்களப் பத்திரிகைகள் இராமநாதனுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தன.

J.N.சந்திரசேகர முதலியார் காலமானார். இவர் யாழ்ப்பாண மாவட்ட சிறிய வீதிகள் சுப்பிரிண்டனாக கடமையாற்றியுள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள பல சந்தைகள் இவரது காலத்தில் கட்டப்பட்டவையே.

**1910 ஒக்ரோபர்**
மருத்துவர் கைலாசபிள்ளை ஓய்வு பெற்றார். சாவகச்சேரி, சங்கானை, முல்லைத்தீவு, காங்கேசன்துறை மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சை நிபுணராக கடமையாற்றிய இவர், குடியேற்ற நாடுகளில் உதவி சத்திரசிகிச்சை நிபுணராகவும் (Asst Colonial Surgeon)கடமையாற்றியுள்ளார்.

**1910 நவம்பர்**
மன்னாருக்கும் - தலைமன்னாருக்குமிடையிலான புகையிரதப்பாதை பூர்த்தியாக்கப்பட்டது.

**1910 டிசெம்பர்**
ராவ் பகதூர் முருகேசம்பிள்ளையின் மகன் மருத்துவர் குமாரசாமி FRCS இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்தார்.

**1910 டிசெம்பர் 07**
மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆரம்பம். இதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி என்பன உட்பட பல இந்துப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**1910 டிசெம்பர் 26**
பிறிட்டோ (C.Britto) காலமானார். மட்டக்களப்பு நீதிபதியாகவும் இராணி அப்புக்காத்துவாகவும் பணி புரிந்த இவர் சட்டசபை தமிழ்ப் பிரதிநிதிக்கான தேர்தலில் இராமநாதனை எதிர்த்து போட்டியிட்டிருந்தார். எனினும் நாவலரின் ஆதரவு காரணமாக இராமநாதன் வெற்றி பெற்றிருந்தார்.

**1911 ஜனவரி 25**
கில்னர் பாடசாலையின் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. வெஸ்லியன் மிஷன் பொதுச்செயலாளர் வணக்கத்துக்குரிய பிரவுன்(J.M.Brown) கட்டடத்தை திறந்து வைத்தார். திருமதி பிரவுன் பெண்கள் பகுதியை திறந்து வைத்தார். வணக்கத்துக்குரிய கிளிபேர்ட் (Gifford), கரட் (Garret)அப்பாப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மருத்துவர் நல்லம்மா முருகேசர் எடின்பரோ (Edinburg)பல்கலைக்கழகத்தில் LRCP பட்டம் பெற்றார். அத்துடன் LCP பட்டத்தை கிளாஸ்கோ (Glasco)பல்கலைக்கழகத்திலும், LP பட்டத்தை டப்ளின் (Dublin) பல்கலைக்கழகத்திலும் பெற்றார்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

93

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | | 14 |
| 15 | | ■ | 16 | | ■ | 17 | |
| | ■ | 18 | | ■ | 19 | | |
| ■ | 20 | | | 21 | | ■ | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:..........................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.மகாபாரதமும் இராமாயணமும் இந்த வகையைச் சேர்ந்தவை. 5. அளவுக்கு மிஞ்சிய ஆசை 7. சாரளம் 8. இரவு இது மாறிவரும் 9. திருமணம் 11. நகரம் /ஊர்/ ஒரு பக்கம் 13. உழைத்துப்பெறு 15. அந்தரப்படு 16. ஒரு பாத்திரம் 17. தீர்வை 18. தாண்டு 19. எய்தவன் இருக்க இதனை நோவதா? 20. புலம்புதல் 22. சிறிய புள் 23. பொட்டு

## மேலிருந்து கீழ்

1. சொல்லுதல் 2. சாப்பிடு 3. காடு 4. காசு 5. தற்செருக்கு 6. பல விலங்குகளுக்கு உள்ள உறுப்பு 8. சல்லி 10. இரப்பு 12. சூரியன் 14. மூன்றுபுரம் 16. படிப்பது இதனை 18. கூடுதல் 19. இல்லை என்பதைக் குறிக்கும். 20. உருவமற்ற 21. தலைவன்.

### சொற்சிலம்பம் போட்டி 92 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சபர்மதி 5.துவி 7. கரி 8. கண்காட்சி 10. வாசகன் 12. தடல் 13. சல்லி 14. பாலன் 15. யாசகன் 18. பணயம் 19.மோர் 20. கரம் 21. பிரதமை 23. விண் 24. பரிசில்

**மேலிருந்து கீழ்**

1.சகவாசம் 2. பரிசல் 3. மகன் 4. திண் 5. துட்டன் 6. விசில் 9. காதலன் 11. கல்யாணம் 14. பாகம்பிரி 16. சய 17. கூர்மை 18. பரண் 19. மோதல் 20. கவி 22.ரசி

### சொற்சிலம்பம் போட்டி இல.93

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

29.07.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 92 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**இரா.சந்திரசேகரன்**
மாசியப்புலம் வீதி,
ஏழாலை வடக்கு ஏழாலை

**2 ஆம் பரிசு**
**மு.கந்தையா**
தபாலக வீதி, சாவகச்சேரி

**3 ஆம் பரிசு**
**சி.சிவடனுஷிகன்**
22/14 விதானை வீதி,
சுண்டுக்குளி

**4 ஆம் பரிசு**
**நா.மோகனேஷ்வரன்**
8/1 தாளையடி ஒழுங்கை
திருநெல்வேலி தெற்கு.

**5 ஆம் பரிசு**
**[illegible]**
பண்ணாகம்,
சுழிபுரம்



2

Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்
செட்டிகுளம், வவுனியா

# பொருளாதார நெருக்கடியும் கோழிப்பண்ணைத்துறையும்

மின்சாரம் தடைப்படும் போது எமது பண்ணையின் குஞ்சு பொரிக்கும் இயந்திரங்களை தடையின்றி இயங்க மின் பிறப்பாக்கிக்கு எரிபொருள் தேவைப்பட, அதனாலும் செலவு அதிகரித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பால் பண்ணைப் பணியாளர்கள் பண்ணைக்கு வருவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. அவர்களின் அன்றாடச் சம்பளத்தை விட சிலரின் பயணச் செலவு அதிகம்.

இப்போது எரிபொருள் இல்லாத நிலையில் இந்த விடயம் இன்னும் சிக்கலாகியுள்ளது. எமது உற்பத்தியான கோழிக் குஞ்சுகளை மக்களுக்கு விநியோகிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. ஏனெனில் தீவன விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு காரணமாக கோழிக் குஞ்சுகளை வாங்குவதில் மக்களின் ஆர்வம் குறைந்துள்ளது. இப்படியான கூட்டு நெருக்கடிகள் காரணமாக கோழிக் குஞ்சு உற்பத்தியைவிட முட்டையாக விற்க வேண்டிய நிலை எமக்குத் தோன்றியுள்ளது. இனப்பெருக்கத்துக்காகவே கோழிகளை உயர்தரத்தில் வளர்க்கும் எமது பண்ணையின் பெறுமதியான முட்டைகளை ஏனைய முட்டைகளை போல விற்பது தொழில்நுட்ப ரீதியாகப் பாதகமானது.எனினும் வேறு வழியின்றி அதனைத்தான் செய்ய வேண்டியுள்ளது. எமது விநியோக வாகனத்துக்கும் மின்பிறப்பாக்கிக்கும் தேவையான எரிபொருளைக்கூட பெறுவது அரச பண்ணையாக இருந்தும் சிரமமாக இருகிறது.

அதாவது பல அதிகாரிகளின் அனுமதி இருந்தும் தகுந்த அளவில் சரியான நேரத்தில் எரிபொருளைப் பெற முடிவதில்லை. அரச பண்ணைக்கே இந்த நிலை என்றால் தனியாரை நினைத்துப் பாருங்கள். அவர்களுக்கும் இதே தேவை இருக்கும்.இதைவிட அதிகமாகவும் இருக்கும். பல பண்ணைகள் பிரமாண்டமானவை. பெருமளவில் தீவனம் தொடர்ச்சியாக தேவை. இயந்திரங்கள் மின்குமிழ்கள் இயங்க எரிபொருள் தேவை? உற்பத்திகளை விநியோகிக்க வாகன எரிபொருள் தேவை. வேலையாள் பிரச்சினை வேறு. எனவே இவை சரியாகக் கிடைக்காத பட்சத்தில் உற்பத்திகள் குறையும். விலை அதிகரிப்பையும் தவிர்க்க முடியாது.

கோழி வளர்ப்பைப் பொறுத்தவரை அவற்றின் செலவில் 70 சதவீதம் வரை தீவனத்துக்கே போகிறது. தீவன விலை மேலும் அதிகரிக்க மொத்தச் செலவும் கணிசமாக உயரும். கோழித் தீவனத்தை பொறுத்தவரை அதன் உள்ள [illegible] கோழிகளின் வளர்ச்சிக்கும் தொழிற்பாடுகளுக்கும் தேவையான புரதம்,மாப்பொருள்,விற்றமின்கள் கனியுப்புகள்,அமினோ அமிலங்கள் என பல முக்கிய மூலப் பொருள்கள் அடங்கியிருக்கும். புரதம், வெளி நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் சோயா அவரையிலிருந்தே [ soya bean] பெறப்படுகிறது. டொலர் நெருக்கடியால் அதனை இறக்கு மதி செய்வதில் சிக்கல் தோன்றியுள்ளது. உக்ரைன் -ரஷ்ய மோதல், பிரேசில் - ஆர்ஜன்டீனா நாடுகளில் ஏற்படுள்ள காலநிலை மாற்றம் என்பன காரணமாக சோயா அவரை உற்பத்தி குறைந்துள்ளது. உலகச் சந்தையில் சோயா அவரைக்கு தட்டுப்பாடு தோன்றி, விலையும் கூடியுள்ளது. உலகின் பிரதான சோயா அவரை உற்பத்தியாளரான ஐக்கிய அமெரிக்கா தனது சோயா அவரையை ஏற்றுமதி செய்யாமல், தமது நாட்டுப்பண்ணைகளுக்கே பாவிக்க முடிவெடுத்துள்ளது.

> கோழி வளர்ப்பைப் பொறுத்தவரை அவற்றின் செலவில் 70 சதவீதம் வரை தீவனத்துக்கே போகிறது. தீவன விலை மேலும் அதிகரிக்க மொத்தச் செலவும் கணிசமாக உயரும்.



இந்தியா போன்ற நாடுகளின் கோழிப்பண்ணைத் துறையே இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. புரத மாற்று மூலங்களான எள்ளுப் புண்ணாக்கு, சூரிய காந்திப் புண்ணாக்கு, தேங்காய்ப் புண்ணாக்கு , மீன் உணவுகள் போன்றன கூட தற்போது கிடைப்பது அரிதாக உள்ளது.இவை கிடைத்தாலும் சோயா அவரையின் தரத்துக்கு ஈடாக மாட்டாதவை.

சக்தியை வழங்கும் முக்கியமான இன்னொரு மூலப் பொருள் மக்காச்சோளமாகும். [ Maize/ Corn] இலங்கையைப் பொறுத்தவரை சோளத்தை அதிகளவில் வெளிநாடுகளில் இருந்து செய்திருந்த அதேவேளை குறித்த அளவு உள்நாட்டிலும் பயிரிடப்பட்டிருந்தது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு:

## மருத்துவர் நேத்தன் உவோட் [Dr. Nathan Ward M.D.]

சில குறிப்புகள் 6

பா. துவாரகன்



மருத்துவர் ஜோன் ஸ்கடரை அடுத்து அமெரிக்காவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த 2 ஆவது தகுதிவாய்ந்த மருத்துவர் நேத்தன் உவோட் ஆவர். இவர் அமெரிக்காவில் நியூ ஹம்ப்சயரில் உள்ள பிளைமோத் என்னுமிடத்தில் 1804 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி பிறந்தார். பௌடுன் மருத்துவக் கல்லூரியில் (Bowdoin Medical College) பயின்று மருத்துவப் பட்டம் பெற்று அமெரிக்காவில் பணியாற்றி வந்தார். வெளிநாடு சென்று மருத்துவ மிசனில் பணியாற்ற விரும்பி பிறதேசத்துக்கு மிசன் தொண்டர்களை அனுப்பும் அமெரிக்கச் சங்கத்துக்கு விண்ணப்பித்தார். இவரது விண்ணப்பத்தை ஏற்ற அமெரிக்க மிசன் சங்கமானது மருத்துவர் உவோட்டை யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்க மிசன் சபைக்கு அனுப்பத் தீர்மானித்தது.

உவோட் 1833 ஆம் ஆண்டு சனவரி மாதம் 8 ஆம் திகதி ஹனா வூட்வோட் கிளார்க் என்பவரைத் திருமணம் செய்தார். 1833 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் திகதி தனது மனைவியுடன் போஸ்ரன் துறைமுகத்திலிருந்து 'இஸ்ரேல்' என்ற பாய்க்கப்பலில் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டார். ஏறத்தாழ 4 மாத கடற்பயணத்துக்குப் பின்னர் 1833.10.28 அன்று சென்னை வழியாக யாழ்ப்பாணத்தை அடைந்தனர். உவோட் தம்பதியினருடன் வேறு 4 மிசனரி தம்பதியினரும் இந்தக்கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு வந்தனர். இந்தக்காலப் பகுதியில் மருத்துவர் ஜோன் ஸ்கடர் பண்டத்தரிப்பில் உள்ள சிகிச்சை நிலையத்துக்கு மேலதிகமாக சாவகச்சேரியிலும் சிகிச்சை நிலையமொன்றை நிறுவி அமெரிக்க மிசன் பணியை ஆற்றி வந்தார். யாழ்ப்பாணத்தில் ஜோன் ஸ்கடர் அமெரிக்க மிசனரியினரது பிரதான பணியாகிய கிறிஸ்துவினது நற்செய்தியை அறிவிக்கும் பணியையும் மருத்துவத் தொண்டையும் ஆற்றி வந்தார். அதேவேளை 1832 இல் சுதேச மாணவர்களுக்கு மருத்துவ செய்முறைப் பயிற்சியையும் ஆரம்பித்தார்.

மருத்துவர் நேத்தன் உவோட்டின் வருகையைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை குருமடத்தின் (Batticotta Seminary) முதல்வராக இருந்த டானியல் பூவர், யாழ்ப்பாணத்தில் மருத்துவ மனையையும் மருத்துவக் கல்லூரியையும் ஆரம்பிப்பதன் அவசியம் பற்றி 1835 இல் அமெரிக்காவிலுள்ள மிசன் பணியகத்துக்குக் கடிதம் வரைந்தார்.

பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி 1833 இல் அமெரிக்க மிசனரியினருக்கு இந்தியாவில் பணியாற்ற அனுமதி வழங்கியதை அடுத்து மருத்துவர் ஜோன் ஸ்கடர் 1836 இல் இந்தியாவுக்கு மருத்துவ மிசனை ஆரம்பிக்கச் சென்றார். இதனால் மருத்துவர் உவோட் யாழ்ப்பாணம் முழுமைக்கும் ஒரேஒரு மருத்துவராகக் கடமையாற்ற வேண்டியேற்பட்டது.

### வட்டுக்கோட்டை குருமடத்தில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்வி
### (Medical Education at Batticotta Seminary)

இந்தப் பாடசாலை 1823 இல் ஆரம்பிக்கப்பட்டது. வட்டுக்கோட்டை குருமடம் ஆசியாவில் நிறுவப்பட்ட முதலாவது கிறிஸ்தவ உயர்கல்வி நிறுவனமாகும். 1855 இல் குருமடத்தின் கல்விச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. இந்தப்பாடசாலையே இன்று யாழ்ப்பாணக் கல்லூரி என்ற பெயரில் விளங்குகிறது.

1823 இல் உடுவிலில் பெண்கள் தங்கியிருந்து படிக்கும் விடுதிப் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. இன்று உடுவில் மகளிர் கல்லூரி என்ற பெயரில் விளங்கும் யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற பெண்கள் பாடசாலையானது ஆசியாவில் பெண்களுக்காக அமைக்கப்பட்ட முதலாவது விடுதிப் பாடசாலையாகும் (The first boarding school in Asia).

வட்டுக்கோட்டையில் வசித்த உவோட், மருத்துவராக மட்டுமன்றி சிறந்த ஆசிரியராகவும் விளங்கினார். மருத்துவர் உவோட், எட்டு அல்லது பத்து வரையான உள்ளூர் மாணவர்களுக்கு வட்டுக்கோட்டை குருமடத்தில் மருத்துவக் கல்வியைப் போதித்தார். இவர்கள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் உள்ள மிசன் பணிமனைகளில் உள்ளூர் மருத்துவர்களாகவும் (Physicians), மருந்தாளர்களாகவும் (Dispensers) அமெரிக்க மிசனில் பணியாற்றினர்.

மருத்துவர் நேத்தன் உவோட்டைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு 3 ஆவதாக வருகை தந்த மருத்துவரான கிறீன் 1850 ஆம் ஆண்டு நவம்பரில் தாம் எழுதிய கடிதம் ஒன்றில் உவோட்டிடம் கற்றவர்களது பெயர்களைக் குறிப்பிடுகிறபோது "மருத்துவர்" (Dr.) என்ற அடைமொழியை அனைவரது பெயரின் முன்பும் எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது:

"என்னுடன் மருத்துவர் கௌல்ட் (Dr Gould, a Native Assistant), என்பவர் பணிபுரிந்தார். இவர் வட்டுக்கோட்டை செமினரியில் மருத்துவர் உவோட்டிடம் மருத்துவம் பயின்றவர். வட்டுக்கோட்டையில் மருத்துவர் எஸ். ஏ. இவாட்ஸ் (Dr S A Evarts) தம்மை நாடிவரும் அனைவருக்கும் சிகிச்சை அளித்தார். உடுவிலில் மருத்துவர் டானியல் நிக்கலஸ் (Dr Daniel Nicholas) நோயாளர்களைப் பார்வையிட்டார். இவர்கள் இருவரும் மருத்துவர் கௌல்ட் போன்று செமினரியில் மருத்துவப் பயிற்சி பெற்றவர்கள். தெல்லிப்பழையில் மருத்துவர் எஸ். ரோப்ஸ் (Dr S Ropes) கடமையாற்றினார்." *

மருத்துவர் உவோட் தனது நேரத்தின் பெரும் பகுதியை வட்டுக்கோட்டை செமினரியில் இயற்கை மெய்யியல், மருத்துவம் ஆகிய பாடங்களை கற்பிப்பதில் செலவிட்டார்.

மேலே குறிப்பிட்வர்களை விட ரி. ஸ்கொட், எஸ். மில்லர், எஸ். குட்வெல் மற்றும் ஜெரேமியா இவாட்ஸ் ஆகியோரும் வட்டுக்கோட்டை செமினரியில் மருத்துவர் உவோட்டிடம் மருத்துவம் பயின்றனர். மருத்துவர் கிறீன் ,மருத்துவக் கல்லூரியை மானிப்பாயில் ஆரம்பிப்பதற்கு முன்பே அமெரிக்க மிசன் சபையில் சேர்ந்த அந்தக்காலத்து யாழ்ப்பாணத்து இளைஞர்கள் கல்வி கற்பதில் குறிப்பாக மருத்துவம் பயில்வதில் கொண்டிருந்த ஆர்வத்தை வட்டுக்கோட்டை செமினரியில் மருத்துவம் கற்பித்த மருத்துவர் உவோட்டும் தனது கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார்.





யாழ்ப்பாணக் கல்லூரியின் இன்றைய முகப்புத் தோற்றம்

மருத்துவர் உவோட் 1844 ஒக்ரோபர் 15, திகதியிட்ட கடிதம் ஒன்றில் கீழ்வருமாறு எழுதுகின்றார்:

"செமினரியில் ஜெரேமியா இவாட்ஸ் தன்னுடைய பயிற்சிக் காலநிறைவில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1840 இல் ஆரம்பிக்கப்பட் வகுப்பின் ஓர் உறுப்பினராக விளங்கிய இவர் தன்னுடைய மாணவப்பருவத்தின் முழு நேரத்தையும் மருத்துவம் பயில்வதிலே செலவிட்டார்." *

பிறதேசத்துக்கு மிசன் தொண்டர்களை அனுப்பும் அமெரிக்கச் சங்கத்துக்கு (ABCFM) மருத்துவர் உவோட் 1845 ஆகஸ்ட் 15 அன்று எழுதிய கடிதத்தின் சில வரிகள் கீழ் வருமாறு :

"இவாட்ஸ் குருமடத்தில் கெமிஸ்தம் (இரசாயனவியல்) கற்பிக்கும் ஆசிரியராக விளங்கினார்... இவர் மருத்துவம் கற்கும் முறையானது ஒழுங்குமுறையானதாகவும் பரந்ததாகவும் இருந்ததுடன் புதிய இங்கிலாந்தை வெற்றி கொள்வதாகவும் அமைந்திருந்து. இளைஞனான இவாட்ஸ் எதிர்காலத்தில் நம்பிக்கை தரும் ஒருவராக விளங்குவார்.... "


வட்டுக்கோட்டை குருமட உயர்கல்வி நிறுவனமானது நாட்டின் தேவைகள் சூழமைவுக்கு ஏற்ற பாடத்திட்டங்களை வகுத்திருந்ததுடன் அன்றைய நாள்களில் ஐரோப்பிலும் அமெரிக்காவிலும் பின்பற்றப்பட்ட விஞ்ஞானக் கல்வியை யாழ்ப்பாண மாணவர்களுக்கு வழங்கியது. 1840 களில் மின்னியல் விஞ்ஞானப்பாடமும் இடம் பெற்றிருந்தது.

1831 இல் மைக்கல் பரடே மின்சாரத்தை உற்பத்திசெய்யும் டைனமோவை கண்டுபிடித்தார். பரடே காந்தத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியம் என்பதைக் கண்டுபிடித்து பத்து வருடங்கள் நிறைவுற்றிருந்த காலத்தில் வட்டுக்கோட்டை குருமட உயர்கல்வி நிறுவனத்தில் மின்னியல் என்பது ஒரு பாடமாக இருந்தது.

வட்டுக்கோட்டை குருமட உயர்கல்வி நிறுவனத்தின் அன்றைய கல்வித் தரத்தை மதிப்பிடும் அளவுகோலாக பிரித்தானிய குடியேற்ற நாட்டுச் செயலாளர் சேர் ஜேம்ஸ் எமர்சன் ரெனன்ற் அவர்களது வருகையும் அவர் எழுதிய குறிப்பும் காணப்படுகிறது.

சேர் ஜேம்ஸ் எமர்சன் ரெனன்ற் 1848 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை குருமட உயர்கல்வி நிறுவனத்தைப் பார்வையிட வருகை தந்தார். 1850 இல் அவர் எழுதிய இலங்கையில் கிறிஸ்தவம் (Christianity in Ceylon) என்ற நூலில் வட்டுக்கோட்டை குருமட உயர்கல்வி நிறுவனத்தில் தான் கண்ட அனுபவத்தை கீழ்வருமாறு விவரிக்கிறார்:

"வட்டுக்கோட்டை குருமட உயர்கலாசாலை மாணவர்கள் செய்து காண்பித்த விஞ்ஞான செய்முறையானது எனக்கு வியப்பாக இருந்தது. அவர்களைப்பற்றி மிகையான புகழுரை கூறவேண்டிய அவசியம் இல்லை. வட்டுக்கோட்டை குருமட உயர் கல்லூரியில் நடைமுறையில் இருந்த கல்வித்திட்ட முறையும் மாணவர்கள் தாம் கற்றுக்கொண்டதை வெளிப்படுத்தும் விதமும் ஐரோப்பிய பல்கலைக்கழங்களுக்கு இணையானதாக இருந்தது..." *



* Nineteenth century American Medical Masonries in Jaffna Ceylon, By: Thiru Arumugam

(தொடரும்)

நன்றி :எழுநா (https://ezhunaonline.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரைவட்டக் கண்ணாடி நாயகன்

○ கோகுலராகவன்

10

'பிரதாப்'
இதுதான் அவர் பெயர். பிரதாப் போத்தன் என்பது பிறகுதான் தெரியும்.
நடிகனுக்கு அஞ்சலிக்குறிப்பு எழுதுவதில் உடன்பாடு இல்லை. ஆனால் நான் அவருடைய திரைப்படம் ஒன்றின் நெடுநாள் இரசிகன்.
"தகரா" என்ற மலையாள திரைப்படத்தின் நாயகனாக அவர் நடித்தார். அவர் நடித்த திரைப்படங்களில் உச்சமும் கடைசியும் அதுதான். படம் வெளிவந்த போதுஅவர் பத்து கமலுக்கு சமம் என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் கமலின் மூலையில் நிற்கக்கூட 'பிரதாப் போத்தன்' சிரமப்பட்டார். கமல் எடுத்த முயற்சியில் கடுகளவு கூட பிரதாப் எடுக்கவேயில்லை.
'தகரா ' பரதன் இயக்கிய படம். அந்தக்கால மலையாள,தமிழ் இளைஞர்களின் காதல் காவியம். திருமணத்தின் முன்னரே உறவாடும் முறையைக் காட்டிக் கொடுத்தது.
காதலியின் தகப்பனை கொலை செய்து விட்டு வெள்ளந்தியாக வந்து காதலியிடமே பிரதாப் சொல்லுவார்.
"வசந்தி நின்னே ஐயனை யான் கொன்னு" (வசந்தி உன்னுடைய அப்பாவை நான் கொன்றுவிட்டேன்) அசத்தியிருந்தார். விட்டேத்தியான நாயகன் வேடம். நாயகி சில்மிஷக்காரி. நன்றாகப் பயன்படுத்திக் கொள்வாள். நாயகியின் அப்பன் இதை அறிந்தபின் இந்த அஞ்சுங்கெட்டானுக்கு கட்டி வைப்பாரா? அடி சக்கை அடி.
அடி வாங்கும் பிரதாப்பால் தாங்கவே முடியாது .ரணகளம். குற்றுயிராக தப்பிப் போவார்.
அந்த இடத்தில் இரசிகனின் மனதில் எழும் வலி பிரதாப்பின் நடிப்பால் இயக்குநரின் வழிகாட்டலுக்கு அப்பால் உருவாக்கப்படும் படிமம்தான். பழி வாங்க திரும்பி வரும் பிரதாப் வெறி கொண்டவர் போல வருவார்.
"சாது மிரண்டால் காடு கொள்ளாது"
அப்பிராணிக்கு ஏற்படும் கோபத்தை பிரதாப் வெளிப்படுத்துவது தனித்திறமையாகத் தோன்றும். இதுவே கமலோடு ஒப்பிடக்காரணம். இந்த 'தகரா'வை பரதன் தமிழில் வினீத்தை வைத்து "ஆவாரம்பூ" என்ற பெயரில் எடுத்தார்.
"சாமிக்கிட்ட சொல்லி வைச்சு சேர்ந்ததிந்த செல்லக்கிளியே" என்ற பாடல் வரும்.



## இருந்து கதைப்பம்

வினீத் பாவம் . பிரதாப்பின் மூலத்தை தருவதற்காக, படம் முழுவதும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தது தெளிவாக தெரிந்தது. பரதன் தமிழ்ப்பதிப்பை எடுக்காமல் விட்டிருக்கலாம். நாசரின் நடிப்பு மட்டும் பார்க்கக்கூடியதாக இருக்கும்.
பிரதாப்புக்கு தகரா தந்த இந்த பிம்பம் அவரை "அழியாத கோலங்களுக்கு" தமிழ் சினிமா அழைத்து வந்தது. அரைவட்டக் கண்ணாடியோடு.நாயகனுக்கு முக்கியத்துவம் தராத கதையமைப்பு. அழியாத கோலங்களில் ஷோபாவின் நடிப்பே பேசப்பட்டது.பாலுமகேந்திராவுக்கு புகழை கொடுத்தது.பின்னர் பாலுமகேந்திராவுடன் மூடுபனி படத்தில் இணைந்தார். இது ஓரளவுக்கு பிரதாப்புக்கு சாதகமான படம்தான். கிட்டத்தட்ட சைக்கோ வகை படம். ஆனால் அதேவகையிலான படங்கள் பிரதாப்பை தொடர்ந்து தேடி வர, வறுமையின் நிறம் சிவப்பிலும் அதே சாயலுடன் நடிக்க வேண்டி வந்தது.
இப்படியான பாத்திரத்தை தவிர்ப்பது நடிகனுக்கு நல்லது. தகராவுக்கு பிறகு பிரதாப் தனது சிறப்பை தமிழ் சினிமாவில் மட்டுமில்லை எந்த சினிமாவிலும் நடிப்பில் காட்டவில்லை. அடங்கிய நடிப்பு. ராதிகாவை சடங்கு பண்ணிக்கொண்டு "மீண்டும் ஒருகாதல் கதை" எடுத்தார். தகராவின் பாதிப்பு படத்தில் இருந்தது. தேறாத சங்கதிகள்,படமும் கூடவே ராதிகாவும்.



தமிழில் இரண்டாம், மூன்றாம் நிலை நாயகனாக வந்தார். அவரது பிம்பம் 'சர்ரென்று' உடைந்துபோய்விட்டது. துணைநடிகனாக மாறிப் போனதில் ஒன்றும் வியப்பில்லை. தன்னை தகராவின் நாயகன் என்பதை அவர் மறக்க வேண்டியதாயிற்று.
நடிகனாக சோபிக்க முடியாமல் போக இயக்குநராக மாறி திரைப்படங்களை, இயக்கத் தொடங்கினார்.
இயக்குநராகி இரண்டே இரண்டு நல்ல விடயங்களைச் செய்தார்.

1. சிவாஜியையும் மோகன்லாலையும் இணைத்து "யாத்ராமொழி" எனும் மலையாளப் படத்தை இயக்கியது.
2. தமிழில் "சீவலப்பேரி பாண்டி" படத்தை இயக்கியது.

நெப்போலியனுக்கு நல்ல பெயர் தந்த படம்.
"கிழக்கு வெளுக்கையில நான் கீரை அறுக்கையில...." என்ற பாடல் இதில் இடம்பெறும்.
சௌபா ஜூனியர் விகடனில் எழுதிய 'சீவலப்பேரி பாண்டி' என்கிற தொடரை படமாக்கினார் பிரதாப்.
நான் தொடரை வாசித்து பாண்டி பற்றி மனதில் ஏக்கத்தோடு இருந்தேன். சிறிது காலம் கழித்து திரைப்படம் வெளிவந்த போது நெப்போலியன் பாண்டியாகவே வாழ்ந்திருப்பார். அவரது இயல்பான வீறாப்பான நடிப்பு பிரதாப்புக்கு படத்தை தரத்தோடு இயக்க வைத்தது. பிரதாப் இன்னுமொரு பரீட்சார்த்தத்தை படத்தில் செய்தார். பாண்டியை உண்மையாக கைது செய்த காவல்துறை அதிகாரியை படத்தில் நடிக்க வைத்தது.
மற்றபடி தமிழில் அவர் இயக்கிய திரைப்படங்கள் வெறும் வணிக முயற்சிகளே .
"தகராவும்""சீவலப்பேரி பாண்டியும்"எனக்கு பிடித்த படங்கள்.
இயக்குநர் ருத்திரய்யாவை ஒரேஒரு படத்துக்காக கொண்டாடு[illegible]
பிரதாப்பும் நல்ல கலைஞன்தான். திரையுலகம் அவரைச் சரி[illegible] அந்த அரைவட்டக்கண்ணாடியை கழற்றி விட்டு நடிக்கவும் தயாராக இருக்கவில்லை.

(கதைப்பம்)

○ இராகவன்



# ஊர்ப்புதினம்

49

போனகிழமை இளையண்ணாவின்ர கல்யாண வீட்டு டெக்கிறேசன் வலு எழுப்பமாயிருந்ததெண்டும் ஆனால் அதை ரசிக்க எனக்கு குடுத்து வைக்கேலை எண்டும் முடிச்சிருந்தனான். அதென்னெண்டால் பஞ்சுமாமாவின்ர கலியாண வீட்டிலண்டு காலமை நான் கனவிலையும் நினைச்சிராத அசம்பாவிதமொண்டு எனக்கு நடந்து போச்சு.
நான் ஏற்கனவே ஊர்ப்புதினத்தில பொன்வண்டு பிடிக்கிறதைப் பற்றி சொல்லேக்குள்ள, உலுவி இலட்சுமியக்கையின்ர பேரப்பொடியள் மோகன் , ஆனந்தன் இரண்டு பேரைப்பற்றியுங் குறிப்பிட்டிருந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். பஞ்சுமாமாவின்ர கல்யாண வீட்டுமூட்டம் அவங்களும் வந்து நிண்டவங்கள். (வவுனியாவிலிருந்து) காலமை விடிஞ்சு மாப்பிள்ளை அழைக்க ஆக்கள் வரும் மட்டும் எல்லாம் நல்லபடியாத்தான் போய்க்கொண்டிருந்தது. மாப்பிள்ளை அழைக்க ஆக்கள் வந்து காரால இறங்கினவுடன வெடிகொளுத்த தொடங்கிச்சினம். அதிலிருந்து தான் எனக்கு கெடுகாலம் தொடங்கிச்சுது. உவங்கள் மோகனும் ஆனந்தனும் ஒரு நெருப்புக்கொள்ளியெடுத்து வெடியளைக் கொளுத்திப்போட்டு எனக்கு கலர் காட்டிக்கொண்டிருந்தாங்கள். அப்பேக்குள்ள அவங்கள் கொளுத்திப்போட்ட வெடியொண்டு சும்மா சீறிப்போட்டு விழுந்துட்டுது. வெடிக்கேல்ல.
நான் பேசாமல் என்ர பாட்டில இருந்திருக்கலாம். என்ர கெடுகாலம் (கெடுகுடி சொற்கேளாது எண்டு சும்மாவே முன்னுள்ளவை சொல்லிவைச்சவை) நான் விழுந்தடிச்சு ஓடிப்போய் அந்த வெடிக்காத வெடியைக் கையில எடுத்து "பாருங்கோடா! நானிதை வெடிக்க வைக்கிறன்" எண்டு சொல்லி வாய்மூடேல்ல அது கணக்காய் வெடிச்சுது. நாட்டாமை படத்தில தமையன் சரத்குமார் கவுண்டமணி மாமாவுக்குக் காதைப்பொத்தி வெளுக்கேக்க, அவருக்கு காதுக்குள்ள கூ....எண்டொரு சத்தம் வருமெல்லோ? அப்பிடித்தான் எனக்கு அப்பேக்குள்ள இரண்டு காதுக்குள்ளயும் கூவிச்சுது.
நான் அப்பிடியே நிலத்தில குந்தியிருந்திட்டன். வலது கையாலதான் அந்த வெடிய எடுத்தனான். அதால வலது உள்ளங்கை முழுக்க சாம்பல் படிஞ்சுபோய் சுண்டு விரல்ல ஒரு காயம். வெடிச்சத்தங் கேட்ட மறுகணம் மோகனும் ஆனந்தனும் பின்னங்கால் பிடரியில அடிபட ஓடிட்டாங்கள். ஓடிப்போய் தூரத்தில நிண்டு பாத்திட்டுப் பிறகு மெல்ல மெல்ல கிட்ட வந்தாங்கள். அதுக்கிடையில என்ர நல்ல காலத்துக்கு அப்பு கண்டுட்டு ஓடி வந்து என்னைத் தூக்கி 'ஏன்ரா பேய்ப்பொடியா! வெடி சுடேக்குள்ள பாத்துச்சுடத்தெரியாதே? இதென்ன விளையாட்டான விசயமே? நல்ல காலம்! கண்ணுக்கு வந்தது புருவத்தோட போன மாதிரி ஒரு சின்ன காயத்தோட தப்பிச்சுட்டாய். ம்.... அதெல்லாம் வளருறதுக்கு முன்னம் மாறிப்போம் ' எண்டு சொல்லிக் கூட்டிக்கொண்டு போனார்.

> அதென்னெண்டால் பஞ்சுமாமாவின்ர கலியாண வீட்டிலண்டு காலமை நான் கனவிலையும் நினைச்சிராத அசம்பாவிதமொண்டு எனக்கு நடந்து போச்சு.

எண்டாலும் என்ர 'மூட்' குழம்பிப்போச்சு. கொஞ்சநேரம் பேயறைஞ்ச மாதிரித்தானிருந்தது. ஆனந்தனும், மோகனும் நல்லாப் பயந்திட்டினம். பின்னைக் கையால வெடிவெடிக்கிறதெண்டால் இலேசுப்பட்ட காரியமே? அடுக்க மாப்பிள்ளை அழைப்பு தொடங்கிச்சு. அப்பு என்னைப் பிடிச்சு மாப்பிள்ளை அழைப்புக்கு வந்த காரில பின்சீற்றில் ஏத்திவிட்டார். எனக்கு அப்பவும் திகைப்பு மாறேல்ல. கார் முன்னுக்கு வெளிக்கிட, பின்னால் ரெண்டு மினிபஸ்களும் வெளிக்கிட்டுது. கார் போய்க் கனகரா வளவுப் பிள்ளையார் கோவில் வாசல்ல நிண்டுது. மாப்பிள்ளை, தோழன், சொந்தக்காரர் எல்லாம் இறங்கிப் போய்ப் பிள்ளையாரைக் கும்பிட்டினம். பிறகு கோவில் வாசல்ல எல்லோரும் வரிசையில் நிக்க, போட்டோ எடுப்பு நடந்தது. அந்தப் போட்டோவில நான் கொஞ்சம் ஓவரா நிமிர்ந்து நிண்டதால நான் போட்டிருந்த பிறவுண் கலர் ரீசேர்ட் கொஞ்சம் மேலுக்கெழும்பி என்ர வண்டியும் பொக்குளும் போட்டோவில விழுந்தது எண்டு போட்டோ வந்தாப் போலதான் தெரிஞ்சுது. அதைப் பாக்கேக்குள்ள ஒருபுறம் சிரிப்பும் இன்னொருபுறம் கவலையாயுமிருந்தது. போட்டோ எல்லாம் எடுத்து நாங்கள் காரில ஏறி, வெளிக்கிடேக்குள்ள பஞ்சுமாமாவின்ர தேப்பன் வேலுப்பிள்ளைக் குஞ்சியைய்யா பிள்ளையாருக்கு ஒரு சிதறுதேங்காயடிச்சுப் பயணத்தைத் தொடக்கிவைச்சார். நாங்கள் அப்படியே வெளிக்கிட்டு பழம் பத்திரகாளி, புதுப்பத்திரகாளி, யார்க்கருப்பிள்ளையார் எண்டெல்லாம் போய், கடைசியாப் பொம்பிளை வீட்டிலபோய் இறங்கினம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மானத்தி

○ கருணை ரவி



44

இந்திராணி என்றதும் பூங்கொடி உருகிப்போனாள். நிருபன் கண்ணீர் விட்டான். அவள் தடவிய கன்னத்தை நிருபன் அழுத்திக் கொண்டு விக்கினான். இந்திராணி பாவாடை, சட்டையுடன் இராணுவத்திடம் போக வந்திருக்கிறாள். அவள் இறுதியாக தன்னைக் கண்டது ஆண்டவன் அருள் என பூங்கொடி நினைத்தாள். இந்திராணி கரும்புலியாய் போய் வெடிக்க முதல், உறவுகளைக் காணவேண்டும் என்பதற்காகவே எல்லா இடமும் பார்த்து வருகையில் தன்னைக் கண்டதாக நினைத்தாள்.

நிருபன் அவளின் கரும்புலிப்படத்தை எடுக்கவேணும் என நினைத்து எங்கேனும் சோககீதம் கேட்குதா என காதைக் கூர்மையாக்கினான். சனங்கள் உடையார்கட்டுக்கு வந்த பிறகு இயக்கம் நோட்டீஸ் அடிப்பதில்லை என்பது அவனுக்கு தெரியாது.

சுண்டிக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணம் போக வள்ளம் வாங்கி வெளிக்கிட ஆயத்தமாகத்தான் இயக்கம் ஆனையிறவை விட்டு சுண்டிக்குளத்துக்கு வந்தது. அவர்கள் வரும்போது இராணுவத்தோடு சண்டை பிடித்துக்கொண்டு வந்தார்கள். அப்போது போகமுடியாமல் வாங்கிய வள்ளத்தைவிட்டு வந்ததாகவும் வரும்போது ஷெல்கள் அருகில் விழ தாங்கள் ஓடியதாகவும் தாய் தகப்பனைப் பிரிந்து தனித்து வந்ததாகவும் நக்கீரன் சொன்னான்.

பூங்கொடி ரீச்சரை நினைத்தாள். ரீச்சர் போய்ச் சேர்ந்தாளா? அல்லது கரும்புலி வெடிக்க அந்தக் கோபத்தில் சனங்களை இராணுவம் கொன்றார்களா? ரீச்சரை நினைத்து பரிதாபப்பட ரீச்சர் வந்தாள். செத்தவர்கள் என்று சொன்ன சனங்கள் சிலர் பற்றைகளில் ஒளித்திருந்து வந்தார்கள். ரீச்சரும் தான் வயல் வரம்போடு படுத்திருந்து வந்ததாகச் சொன்னாள். ரீச்சருக்கு டீ.ஈ ஆமியிடம் போனது பெரிய கவலையாக இருந்தது. பேசீற்றில் டீ.ஈ சைன் வைக்க வேணும். இனி சம்பளம் எடுக்கமுடியாதென வருந்தினாள்.

சனங்கள் உயிர் போகிறது. வாழமுடியவில்லை, உண்ண உணவு இல்லையென கலவரமடைய ரீச்சர் டீ.ஈ என்று உயிர் விடுவதை நினைத்து ரீச்சர் மேல் எரிச்சலடைந்தாள் பூங்கொடி. துப்பாக்கிச் சன்னங்கள் மரங்களில் சடசடத்தன. சில சன்னங்கள்

"டுவிச்... டுவிச்..."

என காதருகோடு சென்றன. இராணுவம் மிக கிட்ட வர, சனங்கள் ஓட வழிதெரியாது திக்குமுக்குப் பட்டனர். மன்னார், கிளிநொச்சி, ஓமந்தை, நெடுங்கேணி, முல்லைத்தீவுச் சனங்கள் எல்லாம் தேவிபுரம், சுதந்திரபுரம், இரணைப்பாலையில் நிரம்பி வழிந்தனர். இனி ஓடுவதற்கு இடமில்லை. ஷெல்கள் விழும் இடங்களில் நிறைய சனங்கள் செத்தபடியிருந்தார்கள்.

வானொலி திடீரென அறிவித்தது மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் பாதுகாப்பு வலயம் என்றும் மக்களை அங்கு செல்லும்படி. சனங்கள் போய்க் கொண்டிருந்தனர். இயக்கம் ஒலி பெருக்கிகளில் அறிவித்தது மக்களை அங்கு போக வேண்டாமென்றும் அது மரணப்பொறி என்றும் மக்களை ஒரே இடத்தில் அழைத்து படுகொலை செய்யப்போகிறார்கள் என்று. சனம் அதைக் கேட்கவில்லை. மாத்தளனுக்குப் போனார்கள்.

அநேகமானவர்கள் வைத்தியசாலையையும் பாடசாலையையும் சுற்றியிருந்தார்கள். இயக்கம் மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம் நீட்டுக்கு மண்ணணை இட்டு காவல் அரண்கள் அமைத்தனர்.

பூங்கொடியும் நிருபனும் நக்கீரனும் பொக்கணையில் பனங்கூடல்களுக்குள் இருந்தனர். ரீச்சர் வரவில்லை. சாப்பாடு இல்லை, அரிசி, மா, சீனி, தேங்காய் எல்லாம் பவுண் விலைக்கு விற்றனர். அவளிடம் சாமான் வாங்க காசில்லை. அவள் சீலை முடிச்சில் இருந்த பவுண் தோட்டை விற்க நினைத்தாள்.

வீதிக்கு வீதி மாங்காய் வியாபாரிகள், தேங்காய் வியாபாரிகள் இருந்தனர். தேங்காய் வியாபாரியிடம் தோடு விற்பதாகக் கூறினாள். அவன் தோட்டைப் பார்த்துவிட்டு இரண்டாயிரம் ரூபா என்றான். அவள் வேதனையோடு தோட்டைக்கொடுத்து இரண்டாயிரம் வாங்கினாள்.

அரிசியும் மாவும் சீனியும் வாங்க இரண்டாயிரம் ரூபாவும் போய்விட்டது. வீட்டுக்கு வந்தாள். நக்கீரனைக் காணவில்லை. தலையிடிப்பதாகவும் மருந்தெடுக்க மாத்தளனுக்குப் போவதாகவும் சொல்லிவிட்டுப் போனதாக நிருபன் சொன்னான். நக்கீரன் மருந்து எடுத்துக் கொண்டு வர கனகத்தைக் கண்டான்.

**சஞ்சீவி**
**தொடர் கதை**

சுண்டிக்குளத்தில் நடந்த சண்டையில் அவன் கனகத்தைப் பிரிந்தான். கனகத்தோடு நக்கீரனின் தாயும்தகப்பனும் வந்தனர். தாயையும் தகப்பனையும் சன நெரிசலில் தான் தவறவிட்டதாகச் சொன்னாள்.

"இஞ்சை மருந்தில்லை, சாப்பாடுகளில்லை. இருந்து சாகப் போறியே?" என்று சொன்னவள்

"இரவிலை சனங்கள் ஆஸ்பத்திரியிலை இருந்திட்டு இரணைப்பாலை ஆமியிட்டைப் போகுதுகள். மாத்தளன் சந்தியிலை நிக்கிற காவல்துறை, இரவிலை பத்துப்பத்துப்பேரா ஆமியிட்டை விடுறான். ஒராளிட்டை ஐயாயிரம் வாங்கிறான். அவன் நேரடியா காசு வாங்கமாட்டான். இஞ்சை ஒரு ஐயா இருக்கிறார். அவருக்கு சிங்களம் தெரியும். அவரோடை ரகசியமா கதைச்சாச் சரி, இரவு போகலாம். நான் இண்டைக்குப் போப்போறன். ஒருத்தருக்கும் சொல் லாதை. விரும்பினால் நீயும் வா"

என்று கனகம் சொன்னாள். நக்கீரனிடம் பணம் இல்லை. அவனுக்குப் போக விருப்பமாக இருந்தது. ஐயாயிரம் யாரிடம் வாங்கு வதென யோசித்துக்கொண்டு நடந்தான்.

இயக்கத்தின் கன்ரர் வாகனம் பொக்கணைச் சந்தியில் நின்றது. வாகனத்தில் மூன்று பேர் நின்றனர். அவர்கள் சாறங்களோடு நின்றனர் அவர்கள் போராளிகள் இல்லை. கன்ரருக்கு அருகில் துப்பாக்கியுட னும் வோக்கியுடனும் நின்றவன் சொன்னான்.

"இரணைப்பாலைத் தென்னந் தோப்புக்குள்ளையும் ஆனந்தபுரத்திலையும் பங்கர் வெட்ட வாங்கோ... அஞ்சு நாளுக்கு நிக்கோணும். ஒரு நாளைக்கு இரண்டாயிரம் ரூபாப்படி தருவம். வரேக்கை தேங்காயள் புடுங்கிக்கொண்டு வரலாம்" இப்ப எவருக்கும் தொழில்கள் இல்லை. சிலருக்கு அது ஒரு வேலைவாய்ப்பாகவும் இருந்தது. தேங்காய் ஒன்று இரண்டாயிரம் ரூபா. ஐம்பது தோங்காய் கொண்டுவந்தால்... நக்கீரனில் பணத்தேவை மேலிட்டது. கன்ரரில் ஏறினான். சிலர் வீட்டில் சொல்லாமலே கன்ரரில் ஏறினார்கள்.

"உவங்கள் கூட்டிக்கொண்டு போகேக்கை செத்தால் நாட்டுப்பற்றாளர் எண்டு சொல்லுவங்கள். உந்த இரண்டாயிரத்துக்கு நாங்கள் சாகிறதே?" ஒரு சுருள்தலைக்காரன் மெதுவாச் சொன்னான். பத்துப்பேர் கன்ரரில் ஏறியதும் துப்பாக்கிக்காரன் கன்ரரை எடுத்தான். வீதியில் சென்ற பெண் ஒருத்தி கன்ரரைப்பார்த்ததும்

(வருவாள்)

---

# ரணில்:

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதியாக நியமிக்கப்பட்டதும் ரணில் காயப்பட்ட படையினரை மருத்துவமனைக்குச் சென்று பார்த்ததும், ஜனாதிபதியாக வந்ததும் படைத்தரப்பைச் சந்தித்ததும் அதைத்தான் காட்டுகின்றன. அதாவது ராஜபக்சக்கள் ரணிலை ஒரு முன்தடுப்பாக முன் நிறுத்தியதன்மூலம் தமது இரண்டாவது இலக்கையும் அதாவது 'அரகலயவைத்' தோற்கடிப்பது என்ற விடயத்தில் வெற்றிபெறத் தொடங்கி விட்டார்களா?

ரணில் பதில் ஜனாதிபதி ஆகியதும் போராட்டக்காரர்கள் உஷார் அடைந்தார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் பாசிச சக்திகள் உண்டு என்று அவர் கூறினார். எனவே 'அரகலய' தன்னை தற்காத்துக் கொள்ள முற்பட்டது. ஏற்கனவே அவர்கள் கட்சித் தலைவர்களை சந்திக்கத் தொடங்கி விட்டிருந்தார்கள். ஜனாதிபதி தேர்தலையொட்டி கட்சிகளுடன் சந்திப்பை வேகப்படுத்தினார்கள். அவர்கள் ஒரு புதிய கட்சியை உருவாக்கப் போவதாகவும் ஓர் அறிவிப்பு வந்தது. ஆனால் அது போராட்டத்துக்குள் ஊடுருவிய சிலரின் பொய்யான அறிவிப்பு என்று போராடும் அமைப்புகள் தெரிவிக்கின்றன. ராஜபக்சக்கள் ரணிலை முன்னிறுத்தியதும் 'அரகலய' முன்னெச்சரிக்கை உணர்வோடு தற்காப்பு நிலைக்குச் செல்லத்தொடங்கியது. எந்த அரசியல் கட்சிகளை போராட்ட களத்தில் அனுமதிக்க மறுத்தார்களோ, அதே கட்சிகளை அவர்கள் சந்தித்தார்கள். எந்த மக்கள் பிரதிநிதிகளை அவர்கள் திருடர்கள் என்று விழித்தார்களோ அவர்களைச் சந்தித்தார்கள்.

எனினும் அரகலயவின் முன்னெச்சரிக்கையோடு கூடிய தற்காப்பு நடவடிக்கைகளை மீறி ரணில் தாக்குதலைத் தொடுத்திருக்கிறார். ராஜபக்சக்கள் செய்யத் துணியாத ஒன்றை அவர் செய்திருக்கிறார். ஏனென்றால் ராஜபக்சக்களின் பலம் உள்நாட்டில் சிங்கள பௌத்த பெருந்தேசியவாத உணர்வுதான். அவர்கள் எப்பொழுதும் உள்நாட்டில் பலமான தலைவர்கள். வெளியரங்கில் பலவீனமானவர்கள். அதனால், உள்நாட்டில் எதிர்ப்புகள் கிளம்பியதும் அவர்களுடைய சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத் தளம் ஆட்டங்காணத் தொடங்கியது. அரகலயவின் பின்னணியில் மேற்கு நாடுகள் நிற்பதும் அவர்களுக்குத் தெரியும். எனவே தப்பிச் செல்வதைத் தவிர ராஜபக்சங்களுக்கு வேறு தெரிவு இருக்கவில்லை. ஆனால் ரணிலின் விடயத்தில் நிலைமை வேறு. அவர் உள்நாட்டில் மிகவும் பலவீனமானவர். வெளியரங்கில் மிகப் பலமானவர். மேற்கு நாடுகள் மத்தியில் அவருக்கு கவர்ச்சி அதிகம். அந்தத் துணிச்சல் காரணமாகத்தான் அவர் அரகலயவின் மீது கை வைத்திருக்கிறார். ஆனால் இது ஒரு விஷப் பரீட்சை. ஏனெனில் அரகலயவின் பின்னணியில் இடதுசாரி மரபில் வந்த, ஏற்கனவே பலமான நிறுவனக் கட்டமைப்புகளை கொண்டுள்ள, அமைப்புகளும் கட்சிகளும் உண்டு. ஏற்கனவே இருதடவை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு தோற்கடிக்கப்பட்ட அனுபவம் உண்டு. பலமான தொழிற்சங்கங்கள் உண்டு. இவற்றின் தொகுக்கப்பட்ட விளைவாக ரணிலை, அவர்கள் எப்படி எதிர்கொள்வார்கள் என்று பார்க்க வேண்டும். ரணில் இப்பொழுதும் உள்நாட்டில் பலவீனமான தலைவர்தான்.

பொருளாதார நெருக்கடிகளை தற்காலிகமாகத் தணிப்பதன்மூலம் அரகலியவை இல்லாமல் செய்யலாம் என்று ரணிலும் மேற்கு நாடுகளும் சிந்திக்கும். ஆனால் முறைமை மாற்றத்தை கேட்டு அரகலய புதிய வடிவம் எடுக்குமாக இருந்தால் அது நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை பாதிக்கும். இதைப் பொழிவாகச் சொன்னால், ரணில் அரகலயவை எப்படிக் கையாள போகிறார் என்பதுதான் நாட்டின் அடுத்தகட்ட அரசியலைத் தீர்மானிக்கப் போகிறது. அரகலயவின் விளைவாகத் தான் அவருக்கு இப்படி ஒரு வாய்ப்பே கிடைத்தது. இக்கட்டுரை எழுதப்படும் கணம் வரையிலும் அரகலயவவின் வெற்றிக் கனிகளை ரணில் தன்னுடைய சட்டப்பைக்குள் போட்டுக் கொண்டு விட்டார்.

நாடாளுமன்றத்தில் தாமரை மொட்டுக்கட்சி தொடர்ந்தும் பலமாகக் காணப்படுகிறது. அதனால் மாற்றத்தைக் கேட்கும் மக்களுக்கு ஒரு தோற்ற மாற்றத்தைக் காட்டும் ஒரு உத்தியாக அரசியல் சங்கீதக் கதிரை விளையாட்டை அந்தக்கட்சி கடந்த மூன்று மாதங்களாக விளையாடி வருகிறது. இந்த சங்கீதக் கதிரையில் கடைசியாக அமர்த்தப்பட்டவர்தான் ரணில். ஆனால் அதுதான் சங்கீதக் கதிரை விளையாட்டின் கடைசிக் கட்டம் என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

கிரேக்கத்தில் பொருளாதார நெருக்கடிகளின்போது ஐந்து ஆண்டுகளுக்குள் ஏழு தடவைகள் அரசாங்கம் மாறியது. இலங்கைத் தீவில் கடந்த சுமார் இரண்டரை ஆண்டு காலப் பகுதிக்குள் ஒன்பது தடவைகள் அமைச்சரவை பகுதியளவோ அல்லது முழுமையாகவோ மாற்றப்பட்டிருக்கிறது. ஐந்து நிதி அமைச்சர்கள் வந்துவிட்டார்கள். மூன்று பிரதமர்கள் வந்துவிட்டார்கள். ஒரு புதிய ஜனாதிபதியும் வந்துவிட்டார். இதுதான் கடைசி மாற்றமா? இதற்குப் பின்னரும் மாற்றங்கள் இடம் பெறுமா? என்பதனை ரணிலுக்கும் அரகலயவுக்கும் இடையிலான மோதல்தான் தீர்மானிக்கப் போகிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோலும் பொம்பிளையும்

ஏ.ஜே.ஆர்.சூரியன்,
ஊறணி

சஞ்சீவி சிறுகதை

> இந்தக் காலத்துக்கு ஏத்த மாதிரி வாழத் தெரியாத உவளைக் கட்டி நான் என்னெண்டு வாழுறது புறோக்கர்? பெற்றோலுக்கு ஒரு கியூவில நிற்கத் தெரியேல்ல. இல்ல இவள் வேண்டாம் புறோக்கர்

கையில மடியில காசில்லை. இந்தச் சம்பந்தத்தையெண்டாலும் முடிச்சுப் போடவேணும்' எண்டு புறோக்கர் பரமசிவம் தனக்குள்ளே நினைத்துக் கொண்டு, ஆசிரியர் முருகானந்தன் வீட்டு வாசலில் தனது சைக்கிளை நிறுத்தி கேற்றில் நின்று, கூப்பிட்டார்.

"மாஸ்டர்... மாஸ்டர்.."

"ஓமோம் இந்தா வாறன் புரோக்கறய்யா..."

அவர் வெளியில வந்து கேற்றைத் திறந்தார். புறோக்கர் அவரை மேலும் கீழும் பார்த்தார். மாஸ்ரருக்கு முப்பத்தைந்து வயசிருக்கும். ஆனால் யானைக் குட்டி மாதிரி கும்மென்றிருந்தார்.

"என்ன புறோக்கர் என்னை மேலும் கீழும் பாக்கிறீங்கள்?"

"இல்லை மாஸ்டர். பொம்பிளை மெல்லிசா இருக்கு. சும்மா நயன்தாரா மாதிரி சோக்கான பொம்பிளை"

"அதுசரி. ஆனா எனக்கு வேலை செய்யிற பொம்பிளைதான் வேணும். '

"அப்ப பிறகென்ன அவவும் ரீச்சர்தான். முப்பது வயது."

"உள்ள வாங்கோ புறோக்கர். வாசலிலேயே நிற்கிறீங்க..."

"நாயில்லையோ.."

"அது நிக்குதுதான். அத கட்டி வைச்சிருக்கிறன். பயப்படாம வாங்கோ"

"இந்தக் காலத்தில நாயும் வேணும் தான் மாஸ்ரர். அதுகும் இல்லாட்டி இந்தக் கள்ளர் காடையர் ஈசியா வீட்டுக்குள்ள வந்திடுவாங்கள்" கூறிக்கொண்டே விறாந்தையில் இருந்த சோபா செற்றியில் அமர்ந்தார் புறோக்கர் பரமசிவம்.

மாஸ்ரரின் அம்மா குசினிக்குள்ளிருந்து ஆவி பறக்க ரீ கொண்டு வந்தார்.

"புறோக்கர் உவன் கட்டினா வேலை செய்யிறவளைத்தான் கட்டுவனெண்டு ஒற்றைக் காலில நிற்கிறான். இந்தாங்கோ ரீ குடியுங்கோ"

புறோக்கர் உடனேயே ரீயை வாங்கிக் கொண்டார்.

புறோக்கர் வீட்டிலிருந்து வரும்போது பிளேன் ரீதான் குடிச்சிட்டு வந்தவர். அங்கர் விக்கிற விலையில சுகர் எண்டும் பாராமல் டக்கெண்டு ரீயைக் குடிக்க ஆரம்பித்தார்.

"நான் ரீச்சர் பொம்பிளையைத்தான் கொண்டு வந்தனான்."

"படத்தைத் தாங்கோவன்"

மாஸ்ரர் அவசரப்படுத்தினார்.

புறோக்கர் மற்றக் கையால் தனது பையிலிருந்து போட்டோவை எடுத்து நீட்டியவாறே, "எங்க அப்பாவைக் காணேல்ல?" என்று கேட்டார்.

"யாழ்ப்பாணத்தில பெற்றோல் கொடுக்கிறாங்களெண்டு மோட்டார் சைக்கிளைக் கொண்டு போயிட்டார்"

வெறும் ரீ கோப்பையைக் கீழே வைச்சிட்டு .

"எப்படிப் பொம்பிளை? சீதனங்களும்..." என்று அவர் முடிக்க முதலே...

"பொம்பிள நல்லாத்தான் இருக்கு..."

அம்மாவும் போட்டோவை வேண்டிப் பார்த்தார்.

"நல்ல வடிவா இருக்கடா..."

"அப்ப பொம்பிளையை ஏதாவது கோயிலில பார்க்கிறதுக்கு செற் பண்ணட்டோ?" இது புறோக்கர்.

"இல்லை புறோக்கர் நாளைக்கு கொக்குவில் செற்றில பெற்றோல் குடுக்கப் போறாங்களாம். அங்க சரியா காலைமை அஞ்சு மணிக்கு வரச் சொல்லுங்க. நானும் வந்து கியூவில நிற்கிறன். அங்க பொம்பிளையைப் பார்க்கிறன்"

புறோக்கர் மாஸ்ரரின் தாயின் முகத்தை ஏறிட்டார்.

"அவன் சொல்லுறதும் சரிதான். அவன் முதலில பொம்பிளையைப் பார்த்து முடிவு பண்ணட்டும் புறோக்கர். பிறகு சீதனத்தைப் பற்றிக் கதைப்பம்."

"அப்ப சரி. அப்ப நான் வாறன்"

அவர் முகம் மலர புறப்பட்டுப் போனார்.

* * * *

அதிகாலை ஐந்து மணி.

கே.கே.எஸ். வீதியிலிருந்து திரும்பி குளப்பிட்டி வீதியில் குணபாலன் வித்தியாலயம் வரை சுமார் ஒரு கிலோ மீற்றருக்கு மேல் சனம் மோட்டார் சைக்கிள்களையும் வைத்துக்கொண்டு கியூவில நிற்க...

தொங்கலில மாஸ்டர் முருகானந்தனும் நிண்டார்.

நேரம் 5.30 மணி. மாஸ்டர் முன்னுக்கும் பின்னுக்குமாக நோட்டம்விட்டார். முன்னால் பத்து பைக்குகளுக்கு அப்பால் புறோக்கர் பரமசிவம் கண்ணில்பட்டார்.

அவரும் மாஸ்டரைப் பார்த்ததும் தனது மோட்டார் சைக்கிளைப் பார்த்துக்கொள்ளும்படி பக்கத்தில சொல்லிவிட்டு அருகில் வந்தார். "என்ன புறோக்கர். பிள்ளையும் வந்ததோ...?"

'பொறுங்கோ மாஸ்டர் ,வெள்ளன இருட்டா இருந்ததால பார்க்க முடியேல்ல. இப்ப பார்த்திட்டு வாறன்'

கொஞ்சநேரம் முன்னுக்குப் பின்னாக புறோக்கர் ஓடித் திரிந்தார். சிறிது நேரத்தின் பின் உற்சாகமாக அருகில் வந்தார்.

"என்ன புறோக்கர். பிள்ளை கியூவில நிற்கிதோ.?"

"இல்லை. மாஸ்டர் அவவின்ர அண்ணன்காரன் தான் நிற்கிறார்"

"ஏனாம் பிள்ளை வரேல்ல..?"

"உந்த சனத்திக்க வந்து கியூவில நிண்டு தன்னால பெற்றோல் அடிக்கேலாதாமெண்டு அவ வரேல்லையாம்."

"ஓ... அப்பிடியே... அப்ப உந்தப் பிள்ளை வேண்டாம் புறோக்கர்"

புறோக்கர் கதிலங்கிப் போனார்.

"என்ன மாஸ்டர் சொல்லுறியள்?"

"இந்தக் காலத்துக்கு ஏத்த மாதிரி வாழத் தெரியாத உவளைக் கட்டி நான் என்னெண்டு வாழுறது புறோக்கர்? பெற்றோலுக்கு ஒரு கியூவில நிற்கத் தெரியேல்ல. இல்ல இவள் வேண்டாம் புறோக்கர்"

"மாஸ்டர் அதுதான் அவவின்ர தமையன் வந்து நிற்கிறாரே..."

இழுத்தார் புறோக்கர்.

"ஏன் தமையனையே கலியாணம் கட்டப் போறன்? நீங்க வேற பொம்பிளை பாருங்கோ புறோக்கர்"

புறோக்கர் வாயடைத்துப் போனார். அவருக்கு வந்த [illegible] னுக்கு நாலு விளாசலாமெண்டு விறுவிறுவெண்டு நடந்துபோனார்.

"ஏன் தங்கச்சி வரேல்ல?"

"புறோக்கர் அவள் ராத்திரியே சொல்லிப்போட்டாள். உந்த மாப்பிள்ளை தனக்கு வேண்டாமெண்டு. தான் ஏழு கிலோமீற்றர் தூரத்தில இருக்கிற பள்ளிக்கூடத்துக்கு சைக்கிளிலதான் போய் வாறதாம். உந்த மாஸ்டர் என்னடாவெண்டா தான் படிப்பிக்கிற ஐஞ்சு கிலோ மீற்றர் தூரத்தில இருக்கிற பள்ளிக்கூடத்துக்கு சைக்கிளில போய் வர ஏலாதெண்டு பெற்றோலுக்கு கியூவில நிண்டு மல்லுக் கட்டுறாராம். நல்ல சொகுசு பிடிபட்டுட்டுதாம். இந்தக் காலத்துக்கு ஏற்ற மாதிரி வாழத் தெரியாத உந்த மாப்பிள்ளை தனக்கு வேண்டாமாம்"

தமையனின் கதையைக் கேட்டதும் திக்பிரமை பிடித்தவர்போல் பேந்தப் பேந்த விழித்தார் புறோக்கர். சோர்ந்து போய் தனது மோட்டார் சைக்கிள் நிண்ட இடத்துக்கு வந்து சேர்ந்தார். இப்ப தான் பெற்றோல் அடிக்கிறதா? அல்லது வீட்டுக்குப் போறதா...? யோசனையில் ஆழ்ந்தார் புறோக்கர்.

## மௌனம் வாய் திறக்கும்....



-மஹேஷ்

கற்களும் கரைந்து போகும்
இழைகிற நதிநீர் உரசி
சொற்கள் ஏன் தேய்வதில்லை
ஒன்றே பலவாறாகி
வரிசைகள் பலவாய் மாறி
மாயமாய் கிறங்கடிக்கும்....

ஒளிக்கதிர் கீறிப் படிகம்
பிரிக்கும் நிறங்கள் கற்றை
உடைபல அணிந்த சொற்கள்
உணர்வினை மாற்றிக்காட்டும்

காலங்கள் பல கடந்து
சுமந்திடும் பொருளின்
பாரம் தாங்காமல் சொல்லுடைந்த
கதைகளும் கேட்பதுண்டு

தோளின் பின் மறைந்து
நின்று கவியினைப் படித்த புத்தன்
பொருளிலே குற்றம் என்றான்...

"சொற்களோ காலிக் கூடு
வெறும் காற்றிலே கடக்கும் ஓசை
வேறொன்றும் செய்வதில்லை

அவரவர் மனதில் புனைவில்
கூட்டினில் பொருள் நிறைக்க
அறிவினில் ஒலிகள் மோதி
மனத்திரையில் விரிந்து நிறையும்
பிம்பமே புரிதல் என்போம்..

ஏதோ ஒரு கணமொன்றில்
சொற்களும் மரித்துப் போக
மௌனம் வாய் திறக்கும்
கேள்விகள் எரிந்து போகும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org